பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 03 | புதன்கிழமை | 19.07.2023 | கதிர் 250

## போருக்குப் பின்னரான தமிழ்த் தேசிய அரசியலில் கலை, இலக்கிய, பண்பாட்டு சிந்தனைகள் இல்லை

### ஆடிப்பிறப்பு விழாவில் ஐங்கரநேசன் ஆதங்கம்

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னரான தமிழர் அரசியலில் விடுதலைப் புலிகளின் காலத்திலேயே தமிழ் இனத்தின் பண்பாடு குறித்தும் கலை, இலக்கியங்கள் குறித்தும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இதற்கெனக் கலை பண்பாட்டுக் கழகம் என்று தனியான ஓர் அலகே உருவாக்கப்பட்டது. போராளிகளிடம் மாத்திரமல்லாமல் தமிழ்ப் பண்பாடு குறித்த உணர்வுபூர்வமான பிரக்ஞை மக்களிடமும் ஏற்படுத்தப்பட்டது. தென்னிலங்கையிலும் தமிழ்-சிங்கள கலைக்கூடல் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், முள்ளிவாய்க்கால் போருக்குப் பின்னரான தமிழ்த் தேசிய அரசியலில் கலை, இலக்கியம், பண்பாடு பற்றிய சிந்தனை இல்லாமல் போய்விட்டது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஆடிப்பிறப்பு விழா திங்கட்கிழமை அராலியில் கொண்டாடப் பட்டது. இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறுதனது ஆதங்கத்தைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

ஆடிப்பிறப்புதமிழ்மக்களின் பண்பாட்டைவெளிப்படுத்துகின்ற ஒருபண்டிகை. பன்மைத்துவம் மிக்க ஆரோக்கிய உணவைக் கூடிப்பகிர்ந்துண்ணும்உணவுப் பண்பாட்டை எடுத்தியம்புகின்ற ஆடிப்பிறப்பு நாளில் பாடசாலைகளில்விடுமுறைவழங்கிய காலம் ஒன்றிருந்தது. ஆனால், இன்று "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே'' என்று பாடிய சோமசுந்தரப் புலவரின் பாடல் மாத்திரம்தான் மிஞ்சியுள்ளது.

பண்பாட்டுச் செயற்பாடுகளுக்காகத் தனியார்கல்வி நிறுவனங்களிடம் விடுமுறையைக் கோருகின்ற நாம் பாடசாலைகளில் ஆடிப்பிறப்புக்கான விடுதலையை மீளப் பெறுவதற்கும் முன்வர வேண்டும்.

சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தினாலும் உலகமயமாக்கலினாலும் ஒருபுறம் தமிழ்ப்பண்பாடுசிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்னொருபுறம் தமிழ் மக்களினது உதாசீனத்தாலும் தமிழ்ப்பண்பாடு அரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மேடைகளில் தமிழ்த் தேசியம் குறித்து முழங்கும் எங்களது ☞2

## இனி து ரகசியம் அல்ல!

ஜனாதிபதிக்கும் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று நடந்த சந்திப்பில், இந்தியாவுக்குச் செல்லவுள்ள ரணில் விக்கிரமசிங்க அங்கு என்ன சொல்லப் போகிறார், குறிப்பாகஅரசமைப்பின்13ஆவது திருத்தத்தைக் குறித்து என்ன சொல்லப் போகிறார் என்பது தெளிவாகிவிட்டது.

கடைசியில் பூனை சாக்குக்குள் இருந்து குதித்துவிட்டது. 13ஆவது திருத்தத்தின் கீழ் நுள்ளிப்போடப்பட்ட பொலிஸ் அதிகாரம்கூட இல்லாமல்தான் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தப் போகின்றாராரம் ரணில் விக்கிரமசிங்க. அதுதான் தனது அதிகாரப் பகிர்வு என்று நேற்று அவர் தெளிவுபடுத்திவிட்டார். அதற்கு மேல் தருவதற்கு எல்லோரும் சரி என்றால் தனக்கும் அதில்பிரச்சினை இல்லைஎன்றார். அதாவது 13க்கு அப்பால் சென்று அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள தனக்கு விருப்பம்தான், ஆனால் மற்றைய கட்சிகள்தான் அதற்கு விடமாட்டேன்என்கிறார்கள்என்றுபழியைத் தூக்கி அடுத்தவர்கள் மீது போட்டுவிட்டார்.

அவரது யோசனைகளைத் தமிழ் அரசுக் கட்சி எதிர்த்தது. அக்கட்சியின் பெருந் ☞2

## திருநெல்வேலியில் ஒருவழிப் பாதை அறிவிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்டமளிப்பைமுன்னிட்டுதிருநெலவேலிப் பகுதியில் வீதிப் போக்குவரத்தை ஒருவழிப் பாதையாக மாற்றுவது தொடர்பாக நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் யுகராஜா ஜெலீபன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் ஒரு வழிப் பாதைவிவரங்கள்தெரியப்படுத்தப்பட்டுள்ளது..

திருநெல்வேலிசந்தியிலிருந்துகொக்குவில் சந்தியை நோக்கிய ஆடியபாதம் வீதியின் புகையிரதக் கடவை வரையான ☞2

## சுகாதார அமைச்சரை பதவி விலக வற்புறுத்தி பட்டினிப் போராட்டம்

### சுகாதார அமைச்சு முன் நேற்று தொடங்கியது

தரமற்ற மருந்துகளை இறக்குமதிசெய்துநாட்டின்சுகாதார துறைக்கு ஏற்படுத் தப்பட்டுள்ள பேரழிவுக்கு சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பொறுப்புகூறவேண்டும்எனவும் அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் எனவும் வலியுறுத்தி சிவில்அமைப்புகளின்பிரதிநிதிகள் சிலர் பட்டினிப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

சுகாதார அமைச்சுக்கு முன்பாக நேற்று அவர்கள் தமது போராட்டத்தைத் தொடங்கினர். இந்தப் போராட்டத்தில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள் உள்ளிட்ட தரப்பினர் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை இவர்கள் போராட்டத்தைத் தொடங்க முயன்றபோது பொலிஸாரினால் இடையூறுஏற்படுத்தப்பட்டது. எனினும் பின்னர் அதற்கு ☞2

## கெஹலிய பதவி விலக தேவையேதும் இல்லை

### இவ்வாறு தெரிவித்தார் சாகர

சுகாதார அமைச்சர் ஹெகலிய பதவி விலக வேண்டியஅவசியம்இல்லை என்று தெரிவித்தார் பொது ஜன பெரமுனவின் பொதுச் செயலாளர்சாகரகாரியவாசம்.

சுகாதாரதுறையில் நெருக்கடியானசூழல்தோன்றியுள்ளதை தொடர்ந்து எதிர்ப்புகள் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன.அமைச்சர் பதவிவிலகவேண்டும்என்று வலியுறுத்தப்படுகின்றன. இது தொடர்பில் கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். ☞2

## பொலிஸ் அதிகாரம் தவிர்த்த 13 என்ற

# அதிகாரப் பகிர்வுக்கான முன்மொழிவு நிராகரிப்பு

### ரணிலின் முன் தமிழரசுக் கட்சி திட்டவட்டமாகத் தெரிவிப்பு

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நடந்த பேச்சில் அதிகாரப் பகிர்வு என்ற பெயரில், அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை பொலிஸ் அதிகாரங்களைத் தவிர்த்து நடைமுறைப்படுத்துவதற்கு முன்வைக்கப் பட்ட யோசனைகளைத் தமிழ் அரசுக் கட்சி அடியோடு நிராகரித்தது.**

**கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் மக்கள் கூட்டணி அந்த யோசனைகளைச் செயற்படுத்தினால் அதற்குத் தமது கட்சி ஆதரவளிக்கும் என்று தெரிவித்தது. அரச பங்காளிகளான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன், சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் ஆகியோர் ரணிலின்யோசனைகளைஆதரித்தனர். ஜனநாயகக் கூட்டணி எந்தக் கருத்தையும் தெரிவிக்காது அமைதி காத்தது. ரணிலின் கருத்தை அந்தக் கட்சி எதிர்க்கவில்லை.**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாசெல்வதற்குமுன்பாகத்தமிழ் அரசியல்கட்சியினரைச்சந்திப்பதற்கு அழைப்பு விடுத்திருந்தார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.**

**தமிழ்அரசுக்கட்சி,தமிழ்மக்கள்** ☞2

## நிதி வங்குரோத்து குறித்து ஆராயும் தெரிவுக்குழு வங்குரோத்தாகியது

### நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன கிண்டல்

நிதி வங்குரோத்து தொடர்பில் ஆராய பொது ஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தலைமையில்நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு தற்போது வங்குரோத்துஅடைந்துள்ளது. இந்தத் தெரிவுக்குழுவின் தலைவர்பதவியைபொதுஜன பெரமுனவுக்கு வழங்குவது நாடாளுமன்றத்தை அவமதிப்பதாக கருதப்படும்.

இவ்வாறு ஐக்கியமக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நிதி வங்குரோத்து தொடர்பில் ஆராய நாடாளுமன்றத்தில் விசேட தெரிவுக் குழு ஒன்றை அமைக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி கையெழுத்திட்டு வலியுறுத்தினோம்.

தெரிவுக்குழுவின் தலைவர் பதவி எதிர்க்கட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

எமது கோரிக்கைக்கு அமைய நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் ஆராய தெரிவுக்கு நியமிக்கப்பட்டது. ஆனால் தெரிவுக்குழுவின் தலைவர் பதவி வங்குரோத்துக்கு பொறுப்புக் கூற வேண்டிய ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தெரிவுக்குழு நியமனத்தில்நேர்ந்துள்ளதவறை திருத்திக்கொள்ளும் வாய்ப்பு சபாநாயகருக்கு உண்டு.

பொதுஜனபெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தலைமையில் நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் ஆராய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வங்குரோத்துதொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழு தற்போது வங்குரோத்து அடைந்துள்ளது. எதிர்க் கட்சிகளின் உறுப் ☞2

## நிதி ஒழுக்கத்தை கட்டியெழுப்புவது இலங்கையின் முதன்மை பொறுப்பு

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

அரசகணக்குக்குழுவின் செயற்பாடுகள் இந்நாட்டின் அரச சேவையை மேம்படுத்துவதற்கு வழிவகுத்துள்ளன. நிதிசார் செயற்பாடுகள் தொடர்பிலான அதிக குழுக்களைநியமித்துள்ள, உலகின் ஒரே ஒருநாடாளுமன்றமான இலங்கையின் நிதி ஒழுக்கத்தை கட்டியெழுப்ப வேண்டிய முதன்மைப் பொறுப்புகாணப்படுகின்றது.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று நடைப்பெற்ற அரசகணக்குக் குழுவின் அறிக்கையின் பிரகாரம், 2019 - 2020ஆம் ஆண்டுகளில்செயற்திறனை வெளிப்படுத்தியிருந்த 65 அரச நிறுவனங்களுக்கு தங்க மற்றும் வெள்ளி விருதுகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கமேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிதிக் கட்டுப்பாடு மற்றும் அரச செலவீனங்கள் தொடர்பிலான அதிகாரங்களைக் கொண்டிருக்கும் நாடாளுமன் றம் ☞2

## வரிச் சலுகை நீடிப்பு

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்திற்கு இலங்கை ஆட்சியாளர்கள் வழங்கியுள்ள வரிச் சலுகையை நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

பலாலிவிமானநிலையத்தின்ப பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக, இவ்விமான நிலையத்தைப் பயன்படுத்தும் சர்வதேச விமான நிறுவனங்களால் செலுத்தப் படவேண்டியவிமானமேறல் அறவீட்டு வரியில் 50 சதவீதத்தை மாத்திரம் 6 மாதங்களுக்கு அறவிடுவது என 2022.12.19 அன்று இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

குறித்த சலுகைக் காலம் ஜூலை11 முடிவடைந்துள்ளது. எனினும் மேலும் 6 மாதங்களுக்கு இந்தச் சலுகையை நீடிக்க அமைச்சரவை தற்போதுஅனுமதி வழங்கியுள்ளது. இந்தவிமான நிலையத்தைப் பயன்படுத்துகின்ற பயணிகளுக்கான பயணச் சீட்டுக்களைவிமானப்பயணச் சீட்டுக்களின் விலையை எளிதில் செலுத்தக்கூடியதான விலையைத் தீர்மானிப்பதற்காக விமானமேறல் அறவீட்டு வரியில் 50 சதவீதத்தை மாத்திரம் அறவிடுவதற்கான அனுமதியை வழங்குகின்ற காலப் பகுதியை மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்பதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தலைவர் இரா.சம்பந்தன் நேற்றைய கூட்டத்தில் மிகக் கடுமையாக ரணிலை விமர்சித்தார். ஒரு ஜனாதிபதி என்கிற மட்டுமரியாதைகூட இல்லாத அளவிற்கு அவரது விமர்சனம் இருந்தது என்று சிலர் விசனிக்கின்ற அளவிற்கு அவரது கருத்துக்கள் இருந்தன. அவை தொடர்பில் எழுதுவதற்குப் பல விடயங்கள் இருப்பதால் நாளை அவற்றைப் பற்றி விரிவாகத் தருகின்றேன் வாசகர்களே! அதுவரையில் பொறுத்திருங்கள்.

பொலிஸ் அதிகாரமற்ற 13ஐ நடைமுறைப்படுத்துவது என்பது அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு அல்ல என்று அதனை நிராகரிப்பதாக தமிழ் அரசுக் கட்சி கூறினாலும் அதனை ஏற்றுக்கொள்ளும் தமிழ்த் தலைவர்களுடன் சேர்ந்த இந்த விடயத்தை முன்கொண்டு செல்வோம் என ரணில் அந்தக் கூட்டத்தில் முகத்துக்கு நேரிலேயே சொல்லிவிட்டார். 13ஐ நடைமுறைப்படுத்தும் அவரது முயற்சிக்குத் தாம் ஆதரவு என்பதை முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அந்தக் கூட்டத்திலேயே தெரிவித்துவிட்டார்.

ஜனநாயகக் கூட்டணியின் இணைத் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதனும் சித்தார்த்தனும் கூட்டத்தில் இருந்தனர். 13 நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அவர்கள் வாய் திறந்து எந்தக் கருத்தையும் அங்கு கூறவில்லை என்றாலும் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி ரணிலுக்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்தியாவிடம் கோரிக்கை விடுத்திருப்பவர்கள் அவர்கள் என்பதால், ரணில் இந்தியா போய் வந்து 13ஐ வைத்து, அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு ஆடப்போகும் ஆட்டத்திற்கு அவர்களும் வாலாட்டுவார்கள் என்பதை எதிர்பார்க்கலாம்.

ஆக மொத்தத்தில் இந்தியா செல்லும் ரணில் பொலிஸ் அதிகாரமற்ற "முழுமையான 13" நடைமுறைப்படுத்தப்படும் என்று இந்தியப் பிரதமர் மோடிக்கு வாக்குக் கொடுப்பார். அதற்கு முன்னோடியாக, முன்னாள் முதலமைச்சர் தலைமையில் சிலர் முன்வைத் திருக்கும் மாகாணசபைக்கான ஆலோசனைச் சபைக்குரிய வேலைகளை வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் செயலாளர் காசிலிங்கம் விக்னேஸ்வரன் மூலம் முன்னெடுக்கப்படுகின்றன, அதற்கு உறுப்பினர்களாக தந்தை செல்வாவின் மருமகள் உள்ளிட்ட - முதலமைச்சர் விக்னேஸ்வரன் முன்மொழிந்த - இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று "புரோகிரஸ் ரிவியூ"வும் கொடுப்பார்.

கடைசியில் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த ரணில் இந்தியாவிடம் இணங்கினார் என்று ஓர் அறிக்கை வரும் அத்துடன் எல்லாவற்றுக்கும் சுபம் எழுதப்படும்.

அதன் பின்னர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுபவர் இனப்பிரச்சினைக்குத் தான் தனியான கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குவார். இசையையும் சண்டைப் பயிற்சியையும்கூட அவரே கவனித்துக்கொள்வார். தமிழர்கள் பனக்கொட்டையைச் சூம்பிக்கொண்டு, துட்டகாமினி போன்று கவட்டைக்குள் கைகளை இறுக்கி வைத்துக்கொண்டு ஒருக்களித்துப் படுக்கவேண்டியதுதான். இந்த அரசியல் தலைவர்களை நம்பினால் அதைத் தவிர ஒரு நாதியும் கிட்டாது தமிழர்களுக்கு.

இடிமின்னல்
(diminnal23@gmail.com)

## திருநெல்வேலியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதை மற்றும் கலட்டிச் சந்தியிலிருந்து இராமநாதன் வீதி, பரமேஸ்வராச் சந்தி வரையான பாதை ஆகியன ஒருவழிப் பாதைகளாகப் பேணப்படும் என்று சபை அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் 37ஆவது பட்ட மளிப்பு விழாவையொட்டி இன்று தொடக்கம் ஜூலை 21 வரையான 3 தினங்களிலும் போக்குவரத்து தொடர்பான அசௌகரியங்களை தவிர்க்கும் பொருட்டு காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இந்த ஒருவழிப் பாதைகள் நடைமுறையில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## போருக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கட்சிகள் எதுவும் தேசியத்தில் பண்பாட்டின் வகிபாகம் குறித்துக் கருத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை. பண்பாட்டை உள்வாங்காத தேசியம் ஒருபோதும் முழுமை பெறாது. அது உள்ளீடற்ற கொழுக்கட்டை போன்றதே என்பதை எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும்.

தேசியம் பற்றி அரசியல் வாதிகள் அதிகம் பேசினாலும் அது மக்களிடம்தான் உள்ளது. மக்களே அதனை அடைகாக்கிறார்கள். ஓர் இனத்தை மற்றைய இனங்களிடமிருந்து வேறுபிரித்துக்காட்டும் தனித்துவமான வாழ்வியல் முறைமையே தேசியமாகும். இதில் முள்ளெலும்பு போன்று பண்பாடு வகிக்கும் பாத்திரம் பிரதானமானது. இதனாலேயே ஓர் இனத்தை அழிக்க நினைப்பவர்கள் முதலில் பண்பாட்டைச் சிதைப்பதற்கு முயற்சிக்கிறார்கள்.

இதனை எதிர்கொள்வதற்கு நாம் கலை, இலக்கிய, பண்பாட்டுச் செயற்பாடுகளை அரசியலுடன் சேர்த்து ஓர் பேரியக்கமாக முன்னெடுக்க வேண்டும் - என்றும் தெரிவித்தார்.

## அதிகாரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணி, ஜனநாயகக் கூட்டணி, ஈபிடிபி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ச, சுசில் பிரேமஜெயந்த, பிரசன்னாரணதுங்க ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் தொடக்கத்தில் ஜனாதிபதி ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் பேச்சைத் தொடங்கினார். அதில் பெரும்பாலானவை வடக்கு கிழக்கில் அரசு செய்வதற்கு உத்தேசித்துள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பானது. 10 வருடத் திட்டங்கள் உட்படத் திட்டங்கள் குறித்தும் அவர் பேசினார். அந்த நிகழ்ச்சி நிரலின் இறுதிப் பகுதியிலேயே அதிகாரப் பகிர்வு குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் உரையின் இடையில் குறுக்கிட்ட தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தன், இன்று நாங்கள் பேச வந்தது அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக அல்ல, அதிகாரப் பகிர்வு தொடர்பாகவே எனவே அதைப் பற்றிப் பேசுங்கள். அதிகாரப் பகிர்வு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டால் அபிவிருத்தியும் தானாகவே நடக்கும். எனவே முதலில் தீர்வு குறித்துப் பேசலாம் என்றார்.

அதனை அடுத்து அதிகாரப் பகிர்வு என்ற தலைப்பின் கீழ் ஆளும் தரப்பினர் செய்வதற்குத் திட்டமிட்டுள்ள விடயங்களை ஜனாதிபதி சபையில் முன்வைத்தார். பொலிஸ் அதிகாரங்களைத் தவிர்த்து அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த ஆளும் தரப்பு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகளை விவரித்தார்.

அதிகாரப் பகிர்வுக் குழு மற்றும் அமைச்சரவை ஆகியவற்றில் இந்த அதிகாரப் பகிர்வு குறித்து ஆராயப்பட்டதாக அவர் தெரிவித்தார். பொலிஸ் அதிகாரங்களைத் தவிர்த்து 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதைப் பாதுகாக்கும் வகையில் அரசமைப்புத் திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்றார்.

மாகாணச் சட்டங்களின் கீழ் ஒருங்கு நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் பலவற்றையும் மாகாண நிரலில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். உதாரணமாக கல்வி, விவசாயம் போன்ற விடயங்களில் முழு அதிகாரமும் மாகாண சபைகளிடமே ஒப்படைக்கப்படும் என்றார்.

கல்வித்துறையில் பெரும்பாலான விடயங்கள், பல்கலைக்கழகங்களை உருவாக்குவது உள்ளிட்ட அதிகாரங்கள் மாகாண சபையின் நிரலுக்குக் கீழேயே கொண்டுவரப்படும். கல்விக் கொள்கைகள் சார்ந்த விடயங்களை மத்திய அரசு தீர்மானிக்கும்.

விவசாயத்தை நவீனமயப்படுத்துவது மற்றும் அதன் விவசாயத்தை அடித்தளத்தில் இருந்து மேம்படுத்தவது தொடர்பான அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும்.

மாகாண சுற்றுலா வளர்ச்சித் துறையை உருவாக்குவதற்கான சட்டமூலம் கொண்டு வரப்படும்.

தொழிற்துறை முதலீட்டில் 250 மில்லியன் டொலர் வரையிலான முதலீடுகளை சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத்திற்காகக் கொண்டு வருவதற்கான அதிகாரங்களை வழங்கும் சட்டமூலம் உருவாக்கப்படும்.

மாவட்டச் சபைகளை உருவாக்குவதற்கான சட்டமூலமும் முன்வைக்கப்படும்.

அதேபோன்று மாகாண சபைகளுக்குரியவைகளாக இருந்தபோதும் மத்தியால் நிர்வகிக்கப்பட்டுவரும் பல விடயங்களை மீண்டும் மாகாணங்களுக்கே ஒப்படைக்கும் வகையிலான அரசமைப்புத் திருத்தங்கள் கொண்டு வரப்படும்.

அதுதான் அதிகாரப் பகிர்வு தொடர்பான எமது முதல் கட்டம். இரண்டாவது கட்டம் அபிவிருத்தி தொடர்பானது. மீள் சக்தி உருவாக்கத்துறையில் வடக்கு மாகாணத்திற்கு முதலீடுகளை வரவைப்பது, பசுமை ஹைட்ரஜன் மற்றும் அமோனியா உற்பத்தியை ஊக்குவிப்பது, மீள்சக்தி உருவாக்கத்திற்கான (சூரிய கல மின் உற்பத்தி) மத்திய நகரமாக பூநகரி உருவாக்கப்படும்,

யாழ்ப்பாணத்திற்கான குடிதண்ணீர் விநியோகத்திற்காக பூநகரியில் ஒரு தண்ணீர்தாங்கி உருவாக்கப்படும். காங்கேசன் துறைமுக அபிவிருத்தி, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா விமான நிலையங்களின் அபிவிருத்தி, தென்னிந்தியாவுக்கும் வடமாகாணத்திற்கும் இடையிலான போக்குவரத்து இணைப்பு, காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய இடங்களில் பொருளாதார அபிவிருத்தி வலயங்கள் உருவாக்குதல், சுற்றுலாத் துறையாழ்ப்பாணம் மற்றும் மன்னாரில் மேம்படுத்தல், தெங்குச் செய்கையை வன்னியில் ஊக்குவித்தல், யாழ்ப்பாணத்தைப் பல்கலைக் கழக நகரமாகத் தரமுயர்த்துதல் ஆகியவற்றை அபிவிருத்தித் திட்டங்களாக ஜனாதிபதி முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், ராஜபக்ச காலத்தில் மூன்று தடவைகள் இந்தியாவுடன் சேர்ந்து 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதாகவும், அதையும் தாண்டி அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதாகவும் மகிந்த ராஜபக்ச வாக்குறுதியளித்திருந்தார். அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு தேவை என்று அவர் சொல்லும்போது, 13ஐ முழுமையாக நடைமுறைப் படுத்தினால்கூட அது அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வாக இருக்க முடியாது என்பதே பொருள் என்றார். அப்படியிருக்கும்போது பொலிஸ் அதிகாரங்கள் இல்லாத 13 என்பது குறைப்பதே தவிர அதிகரிப்பதாகாது என்று சுட்டிக்காட்டினார்.

2015இல் உங்களது ஆட்சியில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் பல இணக்கங்கள் எட்டப்பட்டன. அந்த அறிக்கைகளும் இருக்கின்றன. அதில் பொலிஸ் அதிகாரம் குறித்து ஒரு உப குழு நியமிக்கப்பட்டு ஆராயப்பட்டது, தீர்வு காணப்பட்டது. அதன் பின்னர் பொலிஸ் அதிகாரங்கள் இல்லை என்பது அர்த்தமற்றது என்றார்.

இதற்குப் பதிலளித்த ரணில், நான் ரணில் விக்கிரமசிங்கவே தவிர ரணில் ராஜபக்ச அல்ல, ஜனாதிபதி ராஜபக்ச சொல்லியவற்றின் பின்னால் நான் செல்ல முடியாது என்றார். நான் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக முதலில் கூறியபோது பெரும் குழப்பங்கள் வெடித்தன. அதனால் பொலிஸ் அதிகாரங்கள் குறித்து பின்னர் தீர்மானிக்கலாம் என்று நாம் முடிவு செய்தோம், ஏனைய அதிகாரங்கள் குறித்து இங்குள்ள அமைச்சர்களால் இரு நாள்களுக்கு முன் ஒரு அறிக்கை தரப்பட்டிருக்கிறது. நானும் அதை ஏற்கிறேன். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு நீங்கள் அனுமதிப்பீர்களாக இருந்தால் அது குறித்து நாம் முன்னேறியச் செல்லலாம். பொலிஸ் அதிகாரங்கள் குறித்துத்தான் முரண்பாடு இருக்கிறது. மற்றெல்லாவற்றையும் மத்திய எடுத்தவற்றைத் திரும்பத் தருவது உள்ளிட்ட எல்லாவற்றையும் தருவதற்கு நான் தயார் என்றார் ரணில்.

நீங்கள் பெப்ரவரியில் ஒரு காலக்கெடு கொடுத்தீர்கள், அதற்குள் எதுவும் நடக்கவில்லை. அதன் பின்னர் கடைசிக் கூட்டத்தில் ஜூலை முடிவதற்குள் என்று சொன்னீர்கள், இதுவரையில் எதுவும் நடக்கவில்லை எனவே முடிவேயற்ற இந்த விடயத்தில் நாங்கள் பங்கெடுக்க விரும்பவில்லை. அதற்காக நாம் இதனை எதிர்க்கவும் இல்லை.

ஜூலை 31க்கு முன்னர் எல்லாவற்றையும் நிறைவேற்றுவதாக நான் உறுதியளிக்கவில்லை. முன்மொழிவுகளை வைக்கிறேன் என்றுதான் சொன்னேன். அதனை இப்போது வைத்திருக்கின்றேன். அதற்கு நீங்கள் ஆதரவளிக்கிறீர்களா இல்லையா என்பதே கேள்வி என்றார் ஜனாதிபதி.

இந்த முன்மொழிவுகளை நேர்மையான அதிகாரப் பகிர்வாக நாங்கள ஏற்றுக் கொள்ளவில்லை என்று நேரடியாகவே பதிலளித்தால் சுமந்திரன். அதற்காக இதனை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக நாங்கள் நிற்கமாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தருணத்தில் ஏனைய கட்சித் தலைவர்கள் அமைதி காத்ததைத் தொடர்ந்து மற்றைய கட்சித் தலைவர்களின் கருத்துக்களையும் நான் அறிய விரும்புகின்றேன் என்றார் ரணில் சற்றுக் கோபமாக.

இந்தக் கட்டத்தில் 13ஐப் பலப்படுத்தும் எந்த விடயத்திற்கும் அதனை நடைமுறைப் படுத்தும் முயற்சிகளுக்கும் தனது தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சி முழு ஆதரவையும் வழங்கும் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக இதனை நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதற்கு, இன்னும் இரண்டு வாரங்களில் அமைச்சர்களுடன் இந்த விடயம் குறித்துக் கலந்தாலோசித்து இதனை முன்கொண்டு செல்லலாம், அப்போது மற்றவர்களுக்கும் அழைப்பு விடுக்கலாம் யாருக்கு வர விருப்பம் இருக்கிறதோ அவர்கள் வரலாம் மற்றவர்கள் விட்டுவிடலாம். ஆனால் இதனை முன்கொண்டு செல்வதில் நான் அர்ப்பணிப்புடன் இருக்கின்றேன் - என்றார் ரணில்.

அப்போது பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன், ஜனாதிபதி நீங்கள், இந்தப் பிரச்சினைக்கு நீண்ட கால மற்றும் குறுகிய காலத் தீர்வுகளை முன்வைப்பீர்கள் என்று கூறியிருக்கிறீர்கள். அதில் குறுகிய காலத் தீர்வாக இது இருக்கும் என்று நான் கருதுகின்றேன் என்றார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய தமிழ் அரசுக் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், ஜனாதிபதியின் செயற்பாடுகளை ஒருபிடிபிடித்தார். கடும் கோபத்தோடு கருத்துக்களை முன்வைத்தார். முடிவின்றித் தொடரும் இந்த முயற்சிகளை நிராகரிக்கின்றோம், இந்தச் செய்தி நீங்கள் செல்லும் இடத்திற்கு உங்களுக்கு முன் பாகச் சென்று சேரும் என்று தெரிவித்தார்.

## நிதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினர்கள் அனைவரும் இந்த தெரிவுக்குழுவை புறக்கணித்துள்ளனர்.

நிதி வங்குரோத்து தொடர்பில் ஆராயும் தெரிவுக்குழுவில் தலைவர் பதவி எதிர்க்கட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும் அதனை விடுத்து தலைவர் பதவியை பொதுஜன பெரமுனவுக்கு வழங்குவது நாடாளுமன்றத்தை அவமதிப்பாகக் கருதப்படும் - என்றார்.

## சுகாதார ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதி வழங்கப்பட்டது.

போராட்டமட் குறித்துக் கருத்து தெரிவித்த இலஞ்சம், ஊழல், வீண் விரையத்திற்கு எதிரான பிரஜைகள் அமைப்பின் தலைவர் ஜாமுனி காமந்த துஷார, நாட்டு மக்கள் உயிரிழப்பது இவர்களுக்கு தெரியவில்லை. அதற்காக நாம் குரல் கொடுக்கும் போது பொலிஸார் தலையிட்டு சண்டித்தனம் காட்டுகிறார்கள் - என்று குற்றஞ்சாட்டினார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரப் பிரச்சினையால் வெளியேறினார். சுகாதார பிரச்சினையால் ரணில் விக்கிரமசிங்கவும் ஓடவேண்டி ஏற்படும். சுகாதார அமைச்சர் பதவி விலக வில்லை என்றால் ஜனாதிபதி அவரை உடனடியாக பதவி நீக்க வேண்டும். நீங்கள் நீக்க வில்லை என்றால் அவர் வீடு செல்வதற்கான தொடக்கமாக இது அமையும் - என்றார்.

# அச்சுவேலியின் பெற்றோல் குண்டுவீச்சு



அச்சுவேலி பத்தமேனியிலுள்ள வீடு ஒன்று இன்றிரவு 9.20 மணி அளவில் பெட்ரோல் குண்டு வீசி சேதமாகப்பட்டுள்ளது.

முகத்தை துணியால் மறைத்தவாறு இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் குறித்த வீட்டில் ஜன்னல், கதவு என்பவற்றை அடித்து உடைத்து பெட்ரோல் குண்டுவீசி வீட்டின் பல பொருட்களை எரித்துச் சேதமாக்கியுள்ளனர்.



வீட்டில் இருந்த 42 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயார் ஒருவர் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தார். அவர் அச்சுவேலி பிரதேச வைத்திய சாலையில் சேர்கக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

குண்டுவீசப்பட்டதற்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை.

## நிதி ஒழுக்கத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றை உரிய முறையில் செயற்படுத்தத் தவறியுள்ளமையே நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிகளுக்கு காரணம்.

பசுமைப்பொருளாதாரம், டிஜிட்டல் மயமாக்கம் மற்றும் நவீனமயப்படுத்தல் என்பவற்றுடன் பொருளாதாரத்தை மேம்படுத்தும் செயற்பாடுகளை பழமையான முறையின் கீழ் முன்னெடுக்க முடியாது. அனைத்து அரச நிறுவனங்களும் ஒரு நோக்கத்தின் கீழ் ஒரே திட்டமிடலுடனான பிரிவுகளாக ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

அரச செலவீனங்களை கட்டுப்படுத்தல், ஒவ்வொரு ரூபாவிற்கும் உச்ச பெறுமதியை பெற்றுக்கொடுத்தல், வருமானத்தை அதிகரித்துக் கொள்ளல் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்திக் கொள்ளல் உள்ளிட்ட செயற்பாடுகளின் வாயிலாக நாட்டை முன்னோக்கிக் கொண்டுச் செல்ல வேண்டியது அவசியம். அதற்கான வலுவான நிர்வாகக் கட்டமைப்பொன்று நாட்டுக்கு அவசியப்படுகிறது.

வலுவான பொருளாதாரத்தைக் கட்டமைத்துக் கொள்வதற்காக வலயத்தின் பரந்த பொருளாதாரக் கூட்டிணைவில் இணைவது மற்றும் இந்தியாவுடனான உறவுகளை பலப்படுத்திக் கொள்வது தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும்.

விவசாய நவீன மயமாக்கல் பணிகள் தற்போதும் தொடங்கப்பட்டுள்ள நிலையில், விவசாயத்துறை தொடர்பிலான நிறுவனங்களில் ஒரு பகுதி, மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள நிலையில் மற்றும் சில நிறுவனங்கள் உள்ளூராட்சி சபைகளின் கீழ் காணப்படுகின்றமை அதன் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. விவசாய நவீனமயமாக்கலின் போது அதுகுறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

## கெஹலிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலர் அமைச்சர் ரம்புக்வெல பதவி விலகவேண்டும் எனவேண்டுகோள் விடுக்கின்றனர் ஆனால் அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர். சில கடமைகளை நிறைவேற்றவே அவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

கெஹெலிய சுகாதார அமைச்சராக பதவியேற்றவேளை நாடு பெரும் அந்நிய செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டிருந்தது. அதற்கு மத்தியிலும் அவர் தனது கடமையை வெற்றிகரமாக செய்துள்ளார்.

அமைச்சரின் செயற்பாடுகள் காரணமாகவே இந்த நெருக்கடி உருவானது என்பதுஉளந்தவிசாரணையின் மூலமும் இதுவரை தெரியவரவில்லை. அதனால் அவர் பதவி விலகவேண்டிய அவசியமில்லை - என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# ராஜபக்ஷக்களை தூய்மைப்படுத்தும் தெரிவுக்குழுவைப் புறக்கணிப்போம்

## அநுரகுமார போர்க் கொடி



பொருளாதாரப்பாதிப்புக்கு கப்ரால், பஸில், மஹிந்த ஆகியோர் பொறுப்புக் கூற வேண்டும் என நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டமனுவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலையில்நிதி வங்குரோத்து தொடர்பில் ஆராய நாடாளு மன்றத்தில் தெரிவுக்குழு அமைத்துள்ளமை வழக்கு விசாரணைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

ராஜபக்ஷர்களை தூய்மைப்படுத்தும் தெரிவுக்குழுவில்நாங்கள்கலந்து கொள்ளப் போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கண்டி பகுதியில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நாடு ஏன் வங்குரோத்து நிலைஅடைந்தது,அதற்குயார் பொறுப்புக்கூற வேண்டும் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். வங்குரோத்து நிலை இயற்கையாகவே தோற்றம் பெற்றது என்பதைக்காண்பிப்பதற்காக நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் ஆராய நாடாளுமன்றத்தில் சாகர காரியவசம் தலைமையில் விசேட தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் எடுத்த தீர்மானங்களால் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது. இவ்வாறான நிலையில்பொதுஜனபெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தலைமையில் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த தெரிவுக்குழு நடுநிலையாக உண்மையுடன்செயற்படுமா என்பது சந்தேகத்துக்குரியது.

பொருளாதாரப்பாதிப்புக்கு மத்தியவங்கியின்முன்னாள் ஆளுநர்அஜித்நிவாட்கப்ரால், முன்னாள் நிதிய மைச்சர் பஸில்ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் பொறுப்புக் கூற வேண்டும் என நீதிமன்றத்தில்தாக்கல்செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலையில்நிதி வங்குரோத்து தொடர்பில் ஆராய நாடாளு மன்றத்தில் தெரிவுக்குழு ஒன்றுநியமிக்கப்பட்டுள்ளது. இந்தத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் நீதிமன்ற செயற்பாடுகளுக்குபாதிப்பை ஏற்படுத்தும்.

ராஜபக்ஷர்களைத் தூய்மைப்படுத்தும் நோக்கத்தில் சாகர காரியவசம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள தெரிவுக்குழு பயனற்றது. ஆகவே மக்கள் விடுதலை முன்னணி இந்தபயனற்றசெயற்பாட்டில் பங்குகொள்ளாது. நாங்கள் தெரிவுக்குழுவை புறக்கணிப்போம். தேர்தலை நடத்தினால் மக்கள் நீதிபதிகளாக இருந்து தீர்ப்பு வழங்குவார்கள். - என்றார். (05)

# நிலையான சமாதானத்தை ஏற்படுத்த சட்ட கட்டமைப்பில் திருத்தம்வேண்டும்

## நீதி அமைச்சர் வலியுறுத்து



நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த தற்போதுள்ள சட்டக் கட்டமைப்பில்திருத்தம்மேற்கொள்ளப்படவேண்டும்என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய மத்தியஸ்த தினத்தை முன்னிட்டு நீதி அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துதெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில் -

நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் பிரதேச செயலாளர் மட்டத்தில் மத்தியஸ்த சபை அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மத்தியஸ்த சபை ஊடாக பல்வேறு பிரச்சினைகள், பிணக்குகள் தீர்க்கப்பட்டு வருகின்றன.

சாதாரண விடயங்களுக்காக நீதிமன்றம் சென்று காலம்வீணடிக்கப்படுவதைத் தவிர்க்கும் நோக்கிலேயே மத்தியஸ்த சபை அமைக்கப்பட்டிருக்கிறது.

மத்தியஸ்த சபை 1958 ஆம் ஆண்டே முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டது. என்றாலும் அதில் அரசியல் தலையீடுகள் தொடர்ந்து இடம் பெற்று வந்ததால் அது இல்லாமலாக்கப்பட்டது.

அதன்பின்னர் மீண்டும் 1988 ஆம் ஆண்டு சட்ட ரீதியில் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டது. எந்த அரசியல் தலையீடும் இல்லாமலேயே தற்போது இந்த சபை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. அரசியல் தலையீடுகளை இதில் மேற்கொள்ளலாம். என்றாலும் இந்த ஆணைக்குழுவின் தலைவர் உட்பட உறுப்பினர்கள் அதற்கு இடமளிப்பதில்லை.

மிகவும் நேர்மையான - சமூகத்தில் மதிப்புமிக்க - உறுப்பினர்களே மத்தியஸ்த ஆணைக்குழுவில் அங்கத்துவம் வகித்து வருகின்றனர்.

நாட்டில்தற்போது இருக்கும் ஆணைக் குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பாக மக்கள் திருப்தியான நிலையில் இல்லாவிட்டாலும் மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பில் மக்கள் திருப்தியடைந்து வருகின்றனர்.

மேலும் நாட்டில் தற்போதுள்ள சட்டக் கட்டமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். தற்போதுள்ள சட்டத்தைக்கொண்டு நாட்டில் நிலையானசமாதானத்தை ஏற்படுத்த முடியாது. நாட்டில் நிலையான சமாதானம் நிலவாமல் நாடு அபிவிருத்தியடையப்போவதில்லை.

நாட்டுக்குத்தேவையான சட்டங்களை அமைப்பது நாடாளுமன்றத்தில் இருக்கும் நாங்களாகும் என்றாலும் தற்போதுள்ள சட்டம் நாட்டை அபிவிருத்தி செய்யவோ நிலையான சமாதானத்தை ஏற்படுத்தவோ போதுமானதல்ல. அதனால் காலத்துக்கு தேவையான முறையில்புதியசட்டங்களைக் கொண்டுவர வேண்டும்.

சட்டத்தால் மாத்திரம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. அதேநேரம் சட்டம் இல்லாமலும் முடியாது. அத்துடன் புதிய ஆணைக்குழுக்களை அமைக்க இருக்கிறோம். மேலும் நீதிமன்றங்களில் அதிகரித்துவரும் வழக்கு விசாரணைகளைகுறைத்துக் கொள்ளவே மத்தியஸ்த சபைகளை ஏற்படுத்தி இருக்கிறோம்.

நீதிமன்றத் தீர்ப்பு எவ்வாறாக இருந்தாலும் அதனால் ஒரு தரப்பு அதிருப்தியுடனே திரும்பிச்செல்லும். அதனால் முடியுமான வரை இரு தரப்பையும் மத்தியஸ்தம் செய்யவே நடவடிக்கை எடுக்கவேண்டும். 2015 இல் இதற்காக அதிக கவனம் செலுத்தினோம். அந்தக் காலப்பகுதியில் நூற்றுக்கு 47 வீதமான பிரச்சினைகள் மத்தியஸ்தம் செய்யப்பட்டிருந்தன. எனவே மத்தியஸ்தசபைகளைமேலும் பலப்படுத்தி, அதற்குத்தேவையான வசதி வாய்ப்புக்களை அதிகரிக்கநடவடிக்கைஎடுத்து வருகிறோம். இதற்காக ஐரோப்பிய ஒன்றியம், ஆசிய அபிவிருத்தி நிதியம் மற்றும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்ட அமைப்பு போன்ற நிறுவனங்கள் எமக்கு உதவிவருகின்றன. - என்றார். (05)

# மரக் கன்றுகளுக்கு தீ வைத்த விசமிகள்

## ஆனையிறவில் சம்பவம்

ஏ-9 நெடுஞ்சாலை, ஆனையிறவு பகுதியில் நாட்டப்பட்டிருந்த மரக் கன்றுகளுக்கு விசமிகள் தீ வைத்ததில் அவை தீயில் கருகியுள்ளன.

தன்னார்வ அமைப் பொன்றால் வீதியின் இருமருங்கிலும் நடப்பட்டு பராமரிப்புச் செய்யப்பட்டுவந்த மரக்கன்றுகளில் 28 மரக்கன்றுகளுக்கே இனந்தெரியாத நபர்கள் இவ்வாறு தீ வைத்து அழித்துள்ளனர்.

இயற்கை வளங்கள் அழிவுற்று வரும் நிலையில் மனிதர்களுக்கு பல்வேறுபட்ட நோய்கள் ஏற்பட்டு வருகின்றன.

அந்த நோய்த்தாக்கங்களில்இருந்துமனிதர்களைப் பாதுகாப்பதில் மரங்கள் அளப்பரிய பங்காற்றுகின்றன.

மரங்கள் நாட்டப்பட வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கூறி, அதனை ஊக்குவித்து வருகின்ற நிலையில், இவ்வாறான ஒரு செயற்பாடானது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (05)

# பொறுப்பற்ற செயற்பாட்டில் ஈடுபட்ட 16 மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல்

கடுவலை வெலிவிட்ட வெள வீதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை மோட்டார் சைக்கிள்களை பொறுப்பற்ற முறையில் ஓட்டிச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் 16 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த கடுவலை நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த குழுவினர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞர்கள் மோட்டார் சைக்கிள்களை அதிவேகமாக ஓட்டிச் சென்றதுடன், சிலர் ஒற்றைச் சக்கரத்துடன், தலைக்கவசம் அணியாமல் சென்றதாக தெரியவந்துள்ளது.

அத்தோடு, பொலிஸாரின் அறிவுறுத்தலைப் புறக்கணித்துவிட்டு குறித்த இளைஞர்கள் வேகமாகச் சென்றதுடன், அதிகாரிகள் அவர்களைத் துரத்திச் சென்று பிடித்து 16 மோட்டார் சைக்கிள்களைக் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர்கள் 18 முதல் 26 வயதுக்குட்பட்ட வெல்லம்பிட்டிய, முல்லேரியா, அங்கொடை, மாலபே மற்றும் களனிமுல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) கடுவலை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர். (05)

# சிறந்த வினைத்திறனான 5 அரச நிறுவனங்களுக்கு தங்கம் மற்றும் வெள்ளி விருதுகள் வழங்கும் நிகழ்வு

அரசாங்க கணக்குகள் பற்றியகுழுவின்அறிக்கைக்கு அமைய 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் உயர்ந்த வினைத்திறன் மட்டத்தை அடைத்த 65 நிறுவனங்களுக்கு தங்கம் மற்றும் வெள்ளி விருதுகள் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில், பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்தன ஆகியோரின் பங்கேற்புடன் நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. அரச, மாகாண சபை கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் பொதுக் கணக்குகளைப் பராமரிக்கும் முறைமை, நிதிக் கட்டுப்பாடு மற்றும் செயல்திறன்என்பனநாடாளுமன்ற தகவல் முறைமைகள் மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டு, அரசாங்கக் கணக்குகள்பற்றியகுழுவால் செயற்படுத்தப்படும்கணினிமயப்படுத்தப்பட்ட முறையில் வருடாந்தம் மதிப்பீடு செய்யப்படுவதுடன், அதற்கமைய, கணக்காய்வாளர்நாயகத்தால் பகுப்பாய்வு மற்றும் விசாரணை செய்து மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுக்கு அமைய சிறந்த வினைத்திறனை வெளிப்படுத்திய அரச நிறுவனங்களுக்கு இவ்வாறு விருதுகள் வழங்கப்பட்டன.

அதற்கமைய, 833 அரச நிறுவனங்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டில் அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 நிறுவனங்களுக்கு தங்க விருதுகளும் 30 நிறுவனங்களுக்கு வெள்ளி விருதுகளும், 2020 ஆம் ஆண்டில்தேர்ந்தெடுக்கப்பட்ட 15 நிறுவங்களுக்கு தங்க விருதுகளும் 30 நிறுவனங்களுக்கு வெள்ளி விருதுகளும்வழங்கப்பட்டன என அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார். அரசாங்கஅமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள், அரசாங்கத்தின் விசேட செலவின அலகுகள், மாவட்ட செயலகங்கள், மாகாண சபை நிதியங்கள், மாகாணசபைகளின்அமைச்சு திணைக்களம்சார் விசேட செலவின அலகுகள், மாகாண சபைகளின் நியதிச் சட்ட நிறுவனங்கள், மாநகர சபைகள், நகரசபைகள் மற்றும்பிரதேசசபைகள்போன்ற பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

எட்டாவது நாடாளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள்பற்றியகுழுவின் எண்ணக்கருவுக்கு அமைய அரச நிறுவனங்களின் நிதி மற்றும் செயல்திறனை முறைமைப்படுத்தும் நோக்கில் அரச, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களை மதிப்பீடு செய்யும் கணினிமயப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் 2015 நிதியாண்டை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த விருது வழங்கும் நிகழ்வில் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாணசபைகளின்கீழுள்ள நிறுவனங்கள்மற்றும்பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட சுமார் 1000 அரச நிறுவனங்கள் தொழிநுட்பத்தினூடாக இணைந்துகொள்ளவுள்ளன. (05)



# பிரதமர் தினேஷை சந்தித்தார் புதிய விமானப்படைத் தளபதி!

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, திங்கட்கிழமை அலரி மாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவை மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது சம்பிரதாயப்படி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, பிரதமருக்கு நினைவுப் பரிசொன்றை வழங்கினார்.

எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ இலங்கை விமானப்படையின் 19 ஆவது தளபதி ஆவார். (05)

# புதையல் தோண்டிய நால்வர் மன்னார் பகுதியில் கைது!

மன்னார் தாராபுரம் பகுதியிலுள்ள புராதான இடமொன்றில் புதையல் தோண்டிய நால்வர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளதோடு புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் கருவியையும் விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர்.

கைதானவர்கள் களனி, கெக்கிராவ பிரதேசங்களில் வசிக்கும் 35 மற்றும் 46 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர்.

இவர்கள் நிலத்தில் உள்ள பாறைகள் மற்றும் உலோகப் பொருள்களை புதையல் தோண்ட பயன்படுத்தப்படும் கருவி மூலம் ஆய்வு செய்து புதையல் தேடியதாக விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (05)

# குளவிக் கொட்டுக்கு இலக்காகிய பெருந்தோட்ட தொழிலாளி சாவு

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பம்பரக்கலை நடுக்கணக்கு தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த தோட்ட தொழிலாளி ஒருவர் குளவி தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம் திங்கட்கிழமை காலை 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குளவி தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த 80 வயதானகாளிமுத்துமாரியாய் என்பவர் 5 பிள்ளைகளின் தாயாவார். குடும்ப வறுமை காரணமாக கைக்காசுக்கு வேலைசெய்துவந்துள்ளதாக பிரதேசமக்கள்தெரிவித்தனர்.

பெருந்தோட்டங்களில் தேயிலை செடிகள் முறையாக பராமரிக்கப்படாததன் காரணமாக செடிகளுக்கு அடியில் குளவிகள் கூடு கட்டி வாழுகின்றன எனவும், கொழுந்து பறிக்கும் தொழிலாளர்களை இவைகள் தாக்குவதால் தொடர்ந்தும் பாதிப்புக்குஉள்ளாகுகின்றனர் எனவும் இவ்வாறான மரணங்கள் நிகழ்வதாகவும் மக்கள்விசனம்தெரிவித்தனர்.

குறித்த தோட்ட தொழிலாளியின் உடல் லிந்துலை ஆதார வைத்தியசாலையில் இருந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குகொண்டு செல்லப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெட்கக்கேடு

இலங்கை அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று நடந்த பேச்சுக்களில் அதிகாரப் பகிர்வு என்பது அரசமைப்பின் 13ஆவது திருத்தம்தான் என்பது தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

அதனை ஆதரித்த தமிழ்த் தலைவர்கள் மக்களை ஏமாற்றும் விதத்தில் அரசுத் தலைவர் நேரடியாக அப்படிச் சொல்லவில்லை என்று விளக்கம், வியாக்கியானம் கூறக்கூடும். ஆனால், பேச்சு நிகழ்ச்சி நிரலின் அதிகாரப் பகிர்வு என்ற தலைப்பின் கீழ் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான முன்மொழிவுகள் – அதாவது ஆளும் தரப்பு அதனை எப்படிச் செய்யப்போகின்றது என்கிற விடயங்கள்தான் – குறிப்பிடப்பட்டிருந்தன.

அரசுத் தலைவர் அந்த விடயங்களை வாசிக்கும்போதும் மிகத் தெளிவாக அதிகாரப் பகிர்வு (பவர் டிவலூஷன்) என்ற பதத்தைப் பயன்படுத்தியே வாசித்தார், விளங்கப்படுத்தினார், வியாக்கியானம் செய்தார். எல்லாவற்றுக்கும் மேலாக 2005இல் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஒரு தீர்வுக்கு விடுதலைப் புலிகளுடன் தான் இணங்கியதைத் தான் செய்த தவறு என்றும் அந்தப் பேச்சில் குறிப்பிட்டார்.

ஆக மொத்தத்தில் அதிகாரப் பகிர்வு என்று அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை – ஒன்றுமே இல்லாதது என்று 36 வருடங்களுக்கு முன்னரே நிராகரித்த ஒன்றை – நடைமுறைப்படுத்தப் போகிறார் என்று ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருப்பதை அந்தக் கூட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி மட்டுமே நேரடியாக எதிர்த்திருக்கின்றது. கூட்டத்திற்கே போகாமல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் எதிர்த்திருக்கின்றது. மற்றைய கட்சிகளின் தலைவர்கள் எல்லோரும் – அதில் ஆளும் தரப்புக் கட்சிகள் மற்றும் ஜனநாயகக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி – ரணிலின் திட்டத்தை ஆதரித்து ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இதில் தமிழ் மக்கள் கூட்டணித் தலைவரான முன்னாள் முதலமைச்சர், நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் வெளிப்படையாக ரணிலின் முயற்சிகளுக்கு இந்தப் பேச்சில் ஆதரவு தெரிவித்தார். ஜனநாயகக் கூட்டணித் தலைவர்கள் அதற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை என்றாலும், 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கேட்டு இந்தியாவுக்குக் கடிதம் எழுதியதோடு மட்டும் நிற்காமல் யதார்த்தம் சம்பந்தருக்குப் புரியவில்லை என்றும் விளக்கம் சொன்னவர்கள் என்ற வகையில் அவர்கள் ரணிலின் திட்டத்தை எதிர்க்கின்றோம் என்று சொல்வதற்கு எந்த முகாந்திரமும் இல்லை.

அதிலும் பொலிஸ் அதிகாரம் அற்ற 13 நடைமுறைப்படுத்தப் போவதாக ரணில் கூறியவற்றையே இந்த இரு தரப்பினரும் ஆளும் தரப்பைச் சேர்ந்தவர்களான அமைச்சர் டக்ளஸ், பிள்ளையான், அங்கஜன் ராமநாதன், சுரேன் ராகவன் ஆகியோரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

நேற்றைய கூட்டத்தில் ரணிலும் ஒருவிடயத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். யார் எதிர்த்தாலும் ஆதரிப்பவர்களுடன் சேர்ந்துகொண்டு தான் இந்த விடயத்தை முன்னெடுத்துச் செல்லவார் என்பதே அது. ஆகமொத்தில், தமிழ்த் தரப்பினரில் சிலரையும் சேர்த்துக்கொண்டு பொலிஸ் அதிகாரமற்ற 13 நடைமுறைக்கு வருவதான ஒரு நாடகம் அரங்கேறப் போகின்றது.

முன்மொழிவு அல்லது வரைவு (பில்), சட்டம், அரசமைப்புத் திருத்தம் என்கிற மூன்று கட்டங்கள் மூலமாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று ரணில் கூறியிருக்கிறார். அதிலும் பொடி வைத்தும் பேசியிருக்கிறார். நாங்கள் நாடாளுமன்றத்தில் இவற்றை முன்வைப்போம், நான் இதில் அர்ப்பணிப்புடன் இருக்கின்றேன், ஏற்பதா இல்லையா என்பதை நாடாளுமன்றம் முடிவு செய்யும் என்றிருக்கிறார். ஆக மொத்தத்தில் பொலிஸ் அதிகாரமற்ற அரைகுறை 13 கூட நடைமுறைக்கு வரும் என்பதில் எந்த உறுதியும் இல்லை.

மாகாணச் சட்டங்களின் பொது நிரலில் (ஒருங்கு நிரல்) உள்ள கல்வி, விவசாயம் போன்ற விடயங்களை மாகாண நிரலுக்கு மாற்றுவது உள்ளிட்ட முன்மொழிவுகள் நேற்றைய பேச்சில் தெரிவிக்கப்பட்டன. அதில் மாகாணங்கள் பல்கலைக்கழங்களை உருவாக்கும் சுயாதீனம் பற்றிக்கூடக் குறிப்பிடப்பட்டிருந்தது. நாடாளுமன்றத்தில் இவற்றுக்கும் அனுமதி கிடைக்குமா என்பது கேள்விக்குறியே. அங்கு கடும் எதிர்ப்புக் காட்டப்பட்டால், அல்லது நாடாளுமன்றத்திற்கு வெளியே கடும் எதிர்ப்புக் காட்டப்பட்டால் இவையும்கூட பறிபோகும் ஏதுநிலையை நிராகரிக்க முடியாது.

இப்படிப்பட்ட – 36 வருடங்களுக்கு முன்னரே உருப்படியற்றது என்று நிராகரிக்கப்பட்டதிலிருந்தும் கறையான் தின்ற ஒரு 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்குச் சம்மதித்திருக்கும் தமிழ்த் தலைவர்களின் செயல் வெட்கக்கேடானது. அதிலும் இரு தலைவர்கள் தனிநாடு கேட்டுப் போராடப்போன இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் என்று உரிமை கோரிக்கொள்பவர்கள். இத்தகைய பிழைப்புவாத அரசியலை முன்னெடுப்பதைவிட அவர்கள் அரசியலைவிட்டு ஒதுங்குவதே சிறந்தது.

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பலவீனம்



ந.லோகதயாளன்

நாட்டில் இயற்றப்படும் சட்டங்கள் வெறும் பேப்பர்களாகவே உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டமை தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கும் விதி விலக்கல்ல என எண்ணத் தோன்றுகின்றது.

நாட்டில் மக்களின் வரிப் பணத்தில் இயங்கும் அரச செயலகங்கள் மற்றும் அரச நிதிச் செயல்பாடுகள் அனைத்திலும் வெளிப்படைத் தன்மை இருக்கவேண்டும் என்பதற்காக, அனைத்து விடயத்தினையும் அணைவரும்அறியும்வகையிலேயே 2016ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டமே இந்த தகவல் அறியும் உரிமைச் சட்டம்.

இந்தச்சட்டம் வந்தபோது அக்காலத்து அரசு செய்தகாரியங்களிலே மிகவும் உருப்படியான காரியமாகவும் பார்க்கப்பட்டது. தெற்காசியாவிலேயே மிகச் சிறந்த சட்டம் என்று தெரிவிக்கப்பட்டது. இருந்தபோதும் அரச திணைக்களங்கள் எவையுமே இதனை இன்றுவரை மதிப்பதோ அல்லது உண்மையாக செயல்படுவதோ கிடையாது. அரச திணைக்களங்களின் இந்த அசமந்தப் போக்கை தகவல் அறியும் ஆணைக்குழுவும் தற்போது கண்டுகொள்வது கிடையாது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பங்களினை எந்த வகையில்துட்டிக்கழிக்கலாம்என்று அதிகாரிகள் ஆராய்கின்றனரே அன்றி அதற்கான பதிலை வழங்குவது தமது கடமை என்று அவர்கள் எண்ணுவதில்லை.

இவற்றிற்கு பல உதாரணங்களைக் கூற முடியும். யாழ்ப்பாணத்தில் உள்ள காணிச் சீர் திருத்த ஆணைக்குழுவிற்கு தகவல் கோரி எழுத்தில் விண்ணப்பித்தபோதும் உரிய பதில் எதனையும் வழங்காது, உங்கள் விண்ணப்பங்கள் கொழும்பிற்கு அனுப்பி வைத்துள்ளதாக வாய்மொழி மூலம் பதிலளிக்கின்றனர். அதனையேனும் எழுத்தில் தாருங்கள் என்றால் மௌனம் காக்கின்றனர்.

யாழ்ப்பாணம் பல் கலைக் கழகத்திற்கு அறிவியல் நகரில் கட்டடம் அமைப்பது தொடர்பில் விவரம்அறியவிண்ணப்பித்தபோது தொழில் நுட்ப பீடம் என்பதற்கு பதிலாக தகவல் தொழில் நுட்பபீடம் என எழுதியமையினால் அவ்வாறு ஏதும் இல்லை என பதிலளித்தனர். அதன் பின்பு தொழில் நுட்பபீடம் எனத் திருத்தி மீண்டும் விண்ணப்பித்தால் கேட்ட வினாவைத் தவிர வேறு என்னவெல்லாமோ பதிலளிக்கின்றனர்.

வடக்கு கிழக்கின் 8 மாவட்டச் செயலகங்களிடமும் தனியார் நிலங்களை ஆக்கிரமித்திருக்கும் இராணுவம் அவற்றில் எத்தனை ஏக்கரை சுவீகரிப்பதற்காக விண்ணப்பித்திருக்கிறது என்று கேட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்தால், 4 மாவட்டச்செயலகங்கள் விவரத்தை வழங்குகின்றன. இரு மாவட்டங்கள் கால அவகாசம் கேட்டுப் பதில் வழங்கியிருக்கின்றன.

திருகோணமலை மாவட்டச் செயலகமோ இதனை பாதுகாப்பு அமைச்சிடம் கேளுங்கள் என்று தான்தோன்றித்தனமாகப் பதிலளிக்கிறது..மாவட்டத்திற்கு மாவட்டம் ஒவ்வொரு சட்ட ஏற்பாடா இருக்கின்றது?

இவை அனைத்திற்கும் மேலாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் தகவல் கேட்டு ஓர் தகவல் அறியும் விண்ணபத்தை நாட்டின் இரு அரச கரும மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியில் அனுப்பி வைத்து, அதற்கான பதிலையும் தமிழில் வழங்குமாறு கேட்டபோது. கேள்வியை ஆங்கிலத்தில் அனுப்பி வைக்குமாறு கோரி விண்ணப்பத்தையே திருப்பி அனுப்பியிருக்கிறார்கள்.

அவ்வாறானால், ஆங்கிலம் தெரியாதவர்கள் பல்கலைக்கழக ஆணைக்குழுவிடம் இருந்து தகவல்களைப் பெறமுடியாதோ என்ற ஐயம் எழுகின்றது.

ஒரு மாவட்டத்தின் பிரதேச செயலகம் ஒன்றில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் விசாரணை இடம்பெற்று அதன் அறிக்கையும் மாவட்டச் செயலாளரிடம் உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது. அதன் பிரதியை கோரி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்தபோது மாவட்டச் செயலர் பதில் செயலர் மூலம் அதனைக் கோர வேண்டாம் என நேரில் தூது அனுப்புகின்றார். பதிலைச் சட்டப்படி தரவேண்டியது அவரது கடமை எனத் தெரிவித்தபோதும் இதுவரை அந்தப் பதில் கிடைக்கவில்லை.

இது இவ்வாறு இருக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழான விண்ணபத்தை தபால் மூலம் மட்டுமன்றி நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமும் அனுப்ப முடியும் என்கிறது சட்ட ஏற்பாடு. அவ்வாறு அனுப்புவதற்கான மாதிரி விண்ணபத்தை தட்டச்சு செய்து தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு மின் அஞ்சலில் அனுப்பியபோது இந்த விண்ணபத்தில் கை ஒப்பம் இல்லை, அதனால் பதிலளிக்க முடியாது என்கின்றனர்.


வடக்கு மாகாணத்தில் உள்ள ஓர் கல்வி வலயத்தில் பெரும் தொகை நிதி மோசடி இடம் பெற்றது.

இது தொடர்பில் மாகாண கல்வித் திணைக்களத்திடம் விவரம் கோரியபோது அதனை மாகாணக் கல்வி அமைச்சில் பெறுமாறு பதிலளித்தனர்.

மாகாண கல்வி அமைச்சிற்கு விண்ணப்பித்தால் அதனை மாகாண கல்வித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளுங்கள் எனத் தெரிவித்து விண்ணப்பத்தையும். மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்து விண்ணப்பதாரிக்கும் பிரதியிட்டார்கள்.

ஆனால் அவர்களிடம் அந்த விவரம் இருக்கின்றது. இருந்தாலும் தமக்கேன் வம்பு என்று பொறுப்பைத் தட்டிக்கழிப்பதிலேயே குறியாக இருக்கின்றார்.

இப்படி அதிகாரிகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தப் பின்னிற்பது அந்தச் சட்டத்தையே பலவீனப்படுத்துகின்றது. அரச நிர்வாகச் செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடன் இருக்கவேண்டும் என்கிற நோக்கத்திற்காகவே தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன் கீழ் எத்தகைய விவரங்களைக் கொடுக்கக்கூடாது என்பதைச் சட்டம் மிகத் தெளிவாகக் கூறுகின்றது.




ஆனாலும், அதிகாரிகள் விவரங்களைத் தரப் பின்னடிக்கிறார்கள். மேலிடத்திலிருந்து அல்லது அரசியல்வாதிகளிடமிருந்து தமக்கு நெருக்கடி வருமோ என்கிற அச்சம் அல்லது அடிமைத்தனச் சித்தனை காரணமாகவே அவர்கள் இவ்வாறு நடந்துகொள்கிறார்கள்.

இவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது நடைமுறையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மிகவும் பலவீனமானதாகத் தோன்றுகின்றது.

இவை தொடர்பில் மேன்முறையீட்டு விண்ணப்பத்தை உபயோகிக்க முடியும் இருப்பினும் அதனை ஒரே தடவையில் நிவர்த்திக்க ஏன் அதிகாரிகள் விரும்புவதில்லை என்பதே தற்போதைய கேள்விக்குறியாகவுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# ஜூன் மாத இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் 33 உறுதிமொழிகள் நிறைவேற்றம்; 8 தவறவிடப்பட்டன

## வெரிட்டே ரிசேர்ச் தகவல்

2023ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டத்தின் கண்காணிக்கக்கூடிய 33 உறுதிமொழிகளை இலங்கை நிறைவேற்றியுள்ளது. ஆனால், அவற்றில் 8 உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் தோல்வியடைந்துள்ளதாகவெரிட்டே ரிசேர்ச் அமைப்பின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்நிலை (ஒன்லைன்) கருவியான 'ஐஎம்எவ் கண்காணிப்பான்' தெரிவிக்கிறது.

தோல்வியுற்ற உறுதிமொழிகளின் எண்ணிக்கை மே மாதத்தில் 4ஆக காணப்பட்டது (ஒரு பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட உறுதிமொழி உட்பட). அந்த நிறைவேற்றப்படாத உறுதிமொழிகளின் எண்ணிக்கை நான்காக இருந்து, அடுத்து, 2023 ஜூன் மாதத்துக்குள் 8 ஆக இரட்டிப்பாகியுள்ளது.

அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் பெறுதல், புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டங்களை இயற்றுதல், 2022 ஆம் ஆண்டுக்கான 52 அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் ஆண்டறிக்கைகளைவெளியிடுதல் மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளை படிப்படியாக நீக்குவதற்கான திட்டத்தை உருவாக்குதல் ஆகியவை இதில் உள்ளடங்கும்.

சட்டங்களை இயற்றுதல் மற்றும் தகவல்களைப் பரப்புதல் ஆகிய இரண்டு விடயங்களில் இலங்கை பெருமளவில் தோல்வியடைந்துள்ளது.

மார்ச் - ஜூன் மாதங்களுக்கு இடையில் பந்தயம் மற்றும் சூதாட்ட வரிகளில் திருத்தம் செய்தல், இலங்கை மத்திய வங்கிச் சட்டம் மற்றும் புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை அமுல்படுத்துதல் ஆகிய மூன்று முக்கியமான சட்டங்களை இயற்றுவதற்கு நாடு உறுதியளித்துள்ளது.

இந்த மசோதாக்கள் தொடர்பான வரைவுகள் முறையே 2023 ஏப்ரல் 4, மார்ச் 7 மற்றும் ஏப்ரல் 27 ஆகிய திகதிகளில் அரசாங்க அச்சுத் திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன. எனினும், இந்த வரைவுகள் இன்னும் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை.

தகவல்களை பரப்பும் விடயத்திலும், மூன்று முக்கிய உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமல் உள்ளன. முதலாவது உறுதிமொழியான, பொதுக்கொள்முதல் ஒப்பந்தங்களின் அரையாண்டு வெளியீட்டுக்கான நிதி வெளிப்படைத்தன்மை தளத்தை நிறுவுதல், முதலீட்டு சபை மூலம் வரி விடுவிப்பை பெறும் நிறுவனங்களின் பட்டியலையும், சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வரி விடுவிப்பை பெறும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியலையும் வெளியிட வேண்டும். இதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இரண்டாவது உறுதிமொழி, அரசுக்கு சொந்தமான 52 பிரதான நிறுவனங்களின் 2022 ஆம் ஆண்டு வரையுள்ள வருடாந்த அறிக்கைகளை வெளியிடுவதோடு தொடர்புடையது.

அண்மையில் பப்ளிகேசன்ஸ்.எல்கே இல் வெளியிடப்பட்ட ஒரு விளக்கப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, 52 அரசுக்கு சொந்தமான பிரதான நிறுவனங்களில் 11 நிறுவனங்கள் மட்டுமே 2022 ஆம் ஆண்டு வரையுள்ள தங்கள் ஆண்டறிக்கைகளை வெளியிட்டுள்ளன. இத்தகவல் பரப்புதலின் பற்றாக்குறை இறக்குமதி கட்டுப்பாடுகளை அகற்றுவதற்கான திட்டத்தை வெளியிடப்படாதது வரை நீடிக்கப்படுகிறது. இதில் தகவல் பற்றாக்குறையும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயமாக இருக்கிறது.

ஜூன் மாத இறுதியில் அடையாளம் காணப்பட்ட 14 வீத உறுதிமொழிகளின் முன்னேற்ற நிலையை கண்காணிப்பான் 'அறியப்படாதது' எனவகைப்படுத்தியுள்ளது. அதாவது, இந்த மதிப்பீட்டை செய்வதற்குத் தேவையான தகவல்கள் கிடைக்கவில்லை. இது முந்தைய மாதத்தை விட (6 வீதம்) இரு மடங்காக அதிகரித்துள்ளது. ஐ.எம்.எவ். திட்டத்தின் உரிய நேர முன்னேற்றத்தால் இரண்டு நன்மைகளை அடையாளம் காணமுடியும்என்றுவெரிட்டே ரிசேர்ச் கண்டறிந்துள்ளது.

முதலாவதாக, பெரும்பாலான (அனைத்தும் அல்ல) செயல்களால் விளையக் கூடிய பொருள் அடிப்படையிலான நன்மைகள்.

இரண்டாவதாக, இலங்கையின் நிர்வாகத்தின் மீதான நம்பிக்கையை மேம்படுத்தவும், கடந்த கால கடன் சுமைகளை மறுசீரமைப்பதற்கான பேச்சுகளை ஆதரிக்கவும் எதிர்கால பொருளாதார மீட்சிக்கான பாதையை விரைவுபடுத்தவும் முடியும்.

2023ஆம்ஆண்டுமார்ச் 20ஆம்திகதிஅங்கீகரிக்கப்பட்ட திட்டத்தில்ஐ.எம்.எவ். இற்கான இலங்கையின் உள்நோக்கக் கடிதத்துடன் பதிவுசெய்யப்பட்ட 100 அடையாளம் காணப்பட்ட உறுதிமொழிகளை 'ஐ.எம்.எவ். கண்காணிப்பான்' தற்போது கண்காணித்து வருகிறது.

இந்த அர்ப்பணிப்புகளை நிறைவேற்றுவதன் ஊடாக ஏற்படப்போகும்இலங்கையின் முன்னேற்றம் மற்றும் அதற்கான காலக்கெடுவை நன்கு புரிந்துகொள்வதற்கும் கண்காணிப்பதற்கும், இத்தளம் இலங்கை அரசாங்கத்துக்கும்இலங்கை மக்களுக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் உதவுகிறது. இலங்கை நாடாளுமன்றத்தின்செயற்பாடு மற்றும் செயற்றிறனை கண்காணிக்கும் வெரிட்டே ரிசேர்ச் மூலம் இயங்கிவரும் ஒன்லைன் தளமான மந்திரி.எல்கே மூலம் ஐ.எம்.எவ். கண்காணிப்பானைஇப்போது பொதுமக்கள் அணுகமுடியும். (05)

# பெண்கள் காப்பகத்துக்கு முன்னாள் ஆளுநர் வருகை




காத்தான்குடி பெண்கள் காப்பகத்தின் தலைவரும் முன்னாள் காத்தானக்குடி நகர சபை உறுப்பினருமானசல்மாஅமீர்ஹம்சாவின் அழைப்பின் பேரில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம். எல். எம். ஏ. ஹிஸ்புல்லாஹ் விஜயம் செய்தார். இந்தப் பெண்கள் காப்பகம் தொடர்பான அன்றாட நடவடிக்கைகளை பார்வையிட்டதோடு, எதிர்காலத்தில் இந்தக் காப்பகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக காப்பகத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களோடு கலந்துரையாடினார்.

மேலும் காப்பகத்தில் பராமரிக்கப்படுகின்ற பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்களைச் சந்தித்து அவர்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்து கொண்டார். மேலும் எதிர் வரும் காலங்களில் இந்தக் காப்பகத்தின் அபிவிருத்தியில் தனது முழுமையான பங்களிப்பைத் தருவதாக முன்னாள் ஆளுநர் இதன் போது குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் பெண்கள் காப்பகத்தின் தலைவர் கலாநிதி சல்மா அமீர் ஹம்சா அதன் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் அஷ்ெய்க் மும்தாஸ் மதனி உட்பட பலரும் கலந்துகொண்டனர். (05)

# ஆதனப் பெயர் மாற்றம்

[illegible]

ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்

# குருந்தூர்மலையில் வழிபாட்டுரிமை மறுப்பு; பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு பதிவு!

## மனித உரிமை ஆணைக்குழுவில்

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் கடந்த 14.07.2023 அன்று சைவழிபாட்டுரிமை மறுக்கப்பட்டமைமற்றும், ஊடகவியலாளர் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவில் திங்கட்கிழமை முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.



குறித்த முறைப்பாடு முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்களான அன்ரனிஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், இரத்தினம் ஜெகதீசன், ஊடகவியலாளர் விஜயரத்தினம் சரவணன் ஆகியோரால் வவுனியாவில் அமைந்துள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்தியக் காரியாலயத்தில் மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக குருந்தூர் மலையில் கடந்த 14ஆம் திகதிவெள்ளிக்கிழமையன்று, பிரதோச தினத்தில் சைவத் தமிழ் மக்கள் சிலர் விசேட பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ளச் சென்றபோது பெரும்பாண்மை இனத்தவர்களாலும் மற்றும், பௌத்த துறவிகளாலும் குழப்பம் விளைவிக்கப்பட்டதுடன், பொங்கலுக்காக அங்கு தீமூட்டப்பட்டபோது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவராலும், பெரும்பாண்மை இனத்தவர் ஒருவராலும் சப்பாத்துக்கால்களால் மிதிக்கப்பட்டு அணைக்கப்பட்டது.

அத்தோடுவழிபாடுகளை மேற்காள்ள வருகைதந்த சைவத்தமிழ் மக்களும், மக்கள் பிரதிநிதிகள் சிலரும், சமூகசெயற்பாட்டாளர்களும் பொலிஸாரால் தாக்கப்பட்டுமிருந்தனர்.

இந் நிலையில் குறித்த இடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அங்கு சைவழிபாட்டுரிமையினைத் தடுக்கும் வகையில் செயற்பட்ட பௌத்த தேரர்களுக்கும், பெரும்பாண்மை இனத்தவர்களுக்கும் ஆதரவாகச் செயற்பட்டிருந்ததுடன், சைவவழிபாட்டுரிமைகளைத் தடுக்கின்றசெயற்பாடுகளிலும் ஈடுபட்டிருந்தனர். அத்தோடு குறித்த நாளில் குருந்தூர்மலையில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தஊடகவியலாளர் விஜயரத்தினம் சரவணன் பொலிஸாரால்தள்ளிவிடப்பட்டு அச்சுறுத்தலுக்கு ள்ளாகியிருந்தார். குறிப்பாக சைவ வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டமை மற்றும் ஊடக அடக்குமுறை என்பவற்றில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு எதிராகவே இவ்வாறு மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)





# உத்தியோகத்தர்கள் பாராட்டி கௌரவிப்பு

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட அடைவைப் பெற்றுக் கொண்டமைக்காக சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவுகளில் வழிநடத்திய கிளைகளின் தலைவர்கள் மற்றும் கிராம மட்டத்தில் அதிகளவான பங்களிப்பு செய்த உத்தியோகத்தர்களை பாராட்டி கௌரவிக்கின்ற நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் மற்றும் உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவபிகா ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ. ஹமீட், கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.எல்.ஏ. சபீர், கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.ஐதாக், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஏ.எம்.நளீம், ஜே.எம். றம்ஸா ஆகியோருக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (05)

# சமீபத்தைய சம்பவங்களால் மக்கள் அச்சமடையக்கூடாது இலவச சுகாதார சேவை மீது நம்பிக்கை இழக்கக்கூடாது

## மருத்துவர்கள் சங்கம் கோரிக்கை

சமீபத்தைய சுகாதார பிரச்சினைகள் தொடர்பாக மக்கள் அச்சமடையக்கூடாது எனஇலங்கைமருத்துவர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் தரம் குறைந்த மருந்துகள் தொடர்பிலான சம்பவங்கள் இடம்பெற்றுள்ள போதிலும் மக்கள் அவ்வாறான சம்பவங்களால் அச்சமடையக்கூடாது. இலவச சுகாதாரசேவைகள் குறித்து நம்பிக்கை இழக்கக்கூடாது எனஇலங்கைமருத்துவர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் சுகாதார துறை சவால்களை எதிர்கொண்டுள்ளதை ஏற்றுக்கொண்டுள்ள இலங்கை மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர், ஒரு சில சம்பவங்களை அடிப்படையாக வைத்து முழு சுகாதார சேவையையும் மதிப்பிடுவது நியாயமில்லை எனத் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளில் இடம்பெற்ற சம்பவங்களுக்குத் தரமற்ற மருந்துகளே காரணமா என உரிய விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் தீர்மானங்களுக்கு வரவேண்டும் என வைத்தியர் வின்யா ஆரியரட்ண தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு கிசிச்சைகளுக்காகத் தொடர்ந்தும் வரவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (05)

# மக்கள் பிரச்சினைக்காக நாங்கள் முன்செல்கின்றதால் செல்வாக்கிழக்கும் அரசியல்வாதிகள் சதிசெய்கிறார்கள்!

## அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசல் தலைவர் காட்டம்



எங்களைக்கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று நலிவடைந்து வரும் அரசியல் சக்திகள் பல்வேறு முயற்சிகளை செய்து வருகின்றன. நாங்கள் போதைப்பொருள் கடத்தியோ வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி மக்களை ஏமாற்றியோ பிழைப்பு நடத்துபவர்கள் அல்லர். பாடசாலை விடயமொன்றுக்காகமுன்வந்துபெற்றோர்களுடன்இணைந்துநீதி கேட்டவர்கள். எங்களின் மீது வீண் பழியை சுமத்தி கைது செய்ய எத்தணிப்பது நடக்காது என்று அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசல் தலைவரும், அக்கரைப்பற்று மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர் -

பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுகுழுஇல்லாமையால்நிதிகையாளமுடியாமல் இருக்கிறது.

அதனால் பாடசாலை மின்சாரம்,நீரிணைப்புஎன்பன துண்டிக்கப்பட்டு பெண் பிள்ளைகள் தமது அவசர தேவைகளைநிறைவேற்றக் கூட முடியாமல் உள்ளது என்ற பெற்றோர்களின் குரலுக்கு நாங்கள் நீதி கேட்டே அங்கு நாங்கள் குரல்எழுப்பினோம். இரவில் ஆடிவிட்டு பகலில் தூங்கும் அவர்களுக்கு மாணவர்களின் பிரச்சினைகளைப் பற்றித் தெரியாது.

அக்கரைப்பற்று தேசிய பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுக் கூட்டம் அதன் குழுவின் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காகக் கூடிய போது தேசிய காங்கிரஸின் பிரதேச முக்கியஸ்தர்கள் மூன்று, நான்குபேர்வந்துகூட்டத்தைக் குழப்பிக்கொண்டிருந்தனர். அங்கிருந்த தாய்மாரும், குழப்பவாதிகளைஅங்கிருந்து அகற்றிவிட்டு கூட்டத்தை நடத்துமாறு அதிபரை வேண்டினர். குழப்பவாதிகள் அங்கு கூறிய கருத்துக்களுக்கு வலயக்கல்வி அலுவலக பிரதிநிதியாக வருகைதந்த அதிகாரி பதிலளித்து அவர்கள் முன்வைத்தகுற்றச்சாட்டுக்கள் போலியானவை என்பதை நிரூபித்தார். இவர்கள் தொடர்ந்தும்பழையமாணவர் அமைப்பின் கூட்டத்தையும் குழப்புகிறார்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு கூட்டத்தையும் குழப்புகிறார்கள் இவர்களின் நோக்கம் என்ன? இந்த அமைப்புக்களில்அவர்களும் இணைய விரும்பினால் முறையான அனுமதிகளைப் பெற்று இணைந்து பாடசாலையை மேம் படுத்தலாம். அப்படியெல்லாமல் குழப்புவதன் மூலம் எதை அடைய முயற்சிக்கிறார்கள். இந்தக் குழப்பல் திட்டமிடல்களுக்கு பின்னால் தேசிய காங்கிரஸின் முக்கிய செயலாளர் ஒருவர் இருக்கிறார்.

அன்றும் இவர்களால் வாக்குவாதம் நடைபெற்றது பின்னர் நிர்வாக தெரிவின்போதும் வாக்குவாதம் நடைபெற்றது. நான் அப்போது மேடையில்அமர்ந்திருந்தேன். நானும் சில பெற்றோர்களும் குழப்பவாதிகளைத் தாக்கியதாக பொலிஸில் முறைப்பாடொன்றை செய்துவிட்டு அதில் ஒருவர் வைத்தியசாலைக்கு சென்று விடுதியில் இருக்கிறார் என அறிந்துகொண்டேன். உங்களுக்கு ஒன்றுமில்லை வீட்டுக்கு செல்லுங்கள் என்று மருத்துவர்கள் கூறியும் அவர் வைத்தியசாலையில் இருந்திருக்கிறார். அங்கு கைகலப்புக்கள் எவையும் நடக்கவில்லை என்பதை கூட்டத்தில்கலந்துகொண்டிருந்த அதிபர், பெற்றோர்கள் சத்திய கடதாசியை பொலிஸுக்கு வழங்கியுள்ளார்கள். முறையான அழைப்பாணை கிடைக்கும்போது எங்களின் வாக்குமூலம்வழங்கநாங்கள் தயாராக இருப்பதாக பொலிஸுக்கு அறிவித்திருந்தோம். அதனடிப்படையில் சம்பவம் தொடர்பில் பொலிஸுக்கு வாக்குமூலம் வழங்க சென்ற இரு பெற்றோரை பொலிஸ் கைது செய்து கைதானவர்களை மறுநாள் காலைதான் நீதிமன்றுக்கு ஆஜர் படுத்தியதென்றால் பின்னணியில் உள்ள அரசியல் சக்தி யார் என்பதை எல்லோரும் அறிவர். அக்கரைப்பற்றில் நாளுக்கு நாள் செல்வாக்கிழந்து நலிவடைந்து செல்லும் அரசியல் வாதி ஒருவர் இருக்கிறார்.

நீர்வழங்கல் காரியாலய இடமாற்றத்தின் போதும் நாங்கள் மக்களின் பக்கம் நின்று வீதிக்கு இறங்கிப் போராடினோம், பள்ளிவாசல் காணியை மீளப்பெற வேண்டிய போது அவர்களுக்கு விளங்கும் பாயையில்எடுத்துக்கூறி அந்தக் காணியை மீட்டெடுத்தோம். கொரோனாகாலத்தில்களத்தில் நின்றஅனைத்துப்பள்ளிவாசல் சம்மேளனத்தை கலைக்க முற்பட்டார். வைத்தியசாலை நிர்வாகத்தை சீரமைத்த போதும் அவர் குறுக்கிட்டார். எனது தொழிலை முடக்க அனைத்து வேலைத்திட்டங்களையும் செய்தார். கற்பினிகளுக்கான சிகிச்சை நிலையத்தைகளஞ்சியமாக்க எத்தணித்தார். இவற்றையெல்லாம்செய்ததும்அவரே. அவரின் பழிவாங்களுக்குமுகங்கொடுத்து பழகியவர்கள் நாங்கள். மக்கள் இவர்களை பற்றி நன்றாக அறிந்துள்ளார்கள். - என்றார். (05)

## அரச வைத்திய அதிகாரிகள் சம்மேளனம் கிழக்கு மாகாண ஆளுநரை சந்தித்து பேச்சு




கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில்தொண்டமானுக்கும்அரச வைத்திய அதிகாரிகள் சம்மேளன தலைவர்வைத்தியர்தர்னசிறிசேன மற்றும் செயலாளர் வைத்தியர் ஹரித்தஅலுத்கேக்குமிடையிலான கலந்துரையாடலொன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், கிழக்கு மாகாணத்தில் ஆளுநரால் முன்னெடுக்கப்படும் சேவைகளுக்கு அரச வைத்திய அதிகாரிகள் சம்மேளனம் ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்தனர். ஆளுநரால் சுகாதார துறைக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் வெற்றிபெற வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

கிழக்கு மாகாணத்தில் வைத்தியர்கள் தங்களுடைய சேவைக்காக தங்களை முழுமையாக அற்பணிப்பதற்காக ஆளுநர் செந்தில் தொண்டமான் பாராட்டுக்களை தெரிவித்ததோடு, அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதாகவும் உறுதியளித்தார். (05)




OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

## குருந்தூர்மலைச் சம்பவம்

# பொலிஸாருக்கு எதிராக செய்தியாளர் முறையீடு

குருந்தூர்மலையில் செய்தி சேகரிக்கச் சென்ற தனது கடமைக்கு இடையூறு விளைவித்து, அச்சுறுத்தினார் என்று பொலிஸ் அலுவலருக்கு எதிராக முல்லைத்தீவு ஊடகவியலாளர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஊடகவியலாளர் விஜயரத்தினம் சரவணன் கடந்த 14.07.2023 அன்று முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் வைத்துத் தான் பொலிஸாரால் அச்சுறுத்தப்பட்டிருந்தார் என்றுகுற்றஞ்சாட்டுகின்றார்..

இந்த அச்சுறுத்தல் தொடர்பில், மனித உரிமை ஆணைக்குழுவில் கடந்த திங்கட்கிழமை முறைப்பாடொன்றானைப் பதிவு செய்திருந்தார்.

அந்த முறைப்பாட்டினைப் பதிவுசெய்த பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவித்ததாவது:

கடந்த 14.07.2023 அன்று குருந்தூர்மலைக்கு ஓர் ஊடகவியலாளராக, செய்திஅறிக்கையிடலுக்காகச் சென்றிருந்தேன்.

அவ்வாறு செய்தி அறிக்கையிடல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தபோது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் என்னைத் தள்ளிவிட்டு, என்னை அங்கிருந்து விலகிச் செல்லுமாறு கூறியிருந்தார்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு நான் ஓர் ஊடகவியலாளர் என என்னை அறிமுகப்படுத்தியிருந்தபோதும் என்னை அங்கிருந்து விலகிச்செல்லுமாறு கூறி எனது கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியதுடன், அச்சுறுத்துகின்ற விதத்திலும் செயற்பட்டிருந்தார்.

இது தொடர்பிலே 17.07.2023 நான் வவுனியாவிலுள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்தியக் காரியாலயத்தில் முறைப்பாடொன்றைப் பதிவுசெய்துள்ளேன்.

அத்தோடு குறித்த முறைப்பாட்டில் எனது கடமைக்கு இடையூறு ஏற்படுத்தி, என்னை அச்சுறுத்துகின்ற விதத்தில் செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்பான விவரம் மற்றும், என்னை குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் அச்சுறுத்துகின்றபோது எடுக்கப்பட்ட காணொளி உள்ளிட்ட ஆதாரங்களையும் மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய காரியாலயத்தில் சமர்ப்பித்துள்ளேன்.

அத்தோடு இந்த ஊடக அச்சுறுத்தல் செயற்பாட்டை மேற்கொண்ட குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் மனித உரிமை ஆணைக்குழுவில் வழங்கிய எனது முறைப்பாட்டில், கோரிக்கையையும் முன்வைத்துள்ளேன். குறிப்பாக இந்த நாட்டிலே ஊடகவியலாளர்கள் கடந்தகாலங்களில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றனர், ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர், தாக்கப்பட்டிருக்கின்றனர், அச்சுறுத்தல் நிலைமைகளுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

இதனைவிட ஊடகவியலாளர்கள் பலர் இந்தநாட்டில் தமக்குள்ள அச்சுறுத்தல் நிலைமைகள் காரணமாக புலம்பெயர்ந்துள்ளமையையும் நாம் காண்கின்றோம்.

அத்தோடு கடந்த காலங்களில் ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்ட சம்பவங்கள் பலவும் பதிவாகியுமிருந்தன.

அதேவேளை அண்மைய காலங்களில் கூட ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்ற, அச்சுறுத்தப்படுகிற சம்பவங்கள் பல இடம்பெற்றிருக்கின்றன.

இவ்வாறாக இந்த நாட்டிலே ஊடக அடக்குமுறைச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன.

அவ்வாறு இந்த நாட்டில் இடம்பெறும் தொடர்ச்சியான ஊடக அடக்குமுறைச் செயற்பாடுகளின் ஒரு சம்பவமாகவே எனக்கு இடம்பெற்ற இந்த அச்சுறுத்தல் நிலையைக் காண்கிறேன்.

இந்தநாடு ஜனநாயகநாடு என்று சொல்லப்படுகின்றது. ஊடகம் என்பது ஜனநாயத்தின் நான்காவது தூண் எனச் சொல்லப்படுகின்றது.

ஆனால் இந்த நாட்டில் ஜனநாயகத்தின் நான்காவது தூண் என வர்ணிக்கப்படுகின்ற ஊடகத்துறைக்கு அடக்குமுறைகள் பிரையோகிக்கப்படுகின்றன.

இவ்வாறாக இந்த நாட்டில் ஜனநாயக விரோத செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக இந்த நாட்டிலுள்ள பொலிஸார், இராணுவத்தினர் எனப்படுகின்ற அரச இயந்திரங்களாலும் இவ்வாறான ஜனநாயக விரோத செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே இவ்வாறான ஊடக அடக்குமுறைச் செயற்பாடுகளுக்கும், அதனால் ஏற்படக்கூடிய ஜனநாயகச்சீர்குலைவுக்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார். (05)

# மருந்து கொள்வனவில் வெளிப்படைத் தன்மையில்லை அதுவே தற்போதைய பிரச்சினைகளுக்குக் காரணம்

## இலங்கை வர்த்தக சம்மேளனம் சாடல்

இலங்கையின் சுகாதார துறையில் சமீபத்தில் இடம்பெற்றுள்ள விடயங்கள் தொடர்பாக ஆழ்ந்த கரிசனைகொண்டுள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை வர்த்தக சம்மேளனம், பொதுசுகாதார அமைப்பிற்காக கொள்வனவு செய்யப்படும் மருந்துகளின் தரம் குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

மருந்துதட்டுப்பாடு என்பது பொருளாதார நெருக்கடியிலிருந்து உருவானது. அதேவேளை வலுவான மற்றும் வெளிப்படையான கொள்முறை இல்லாததால் தற்போதைய பிரச்சினை உருவானது என இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

வெளிப்படையானகொள்முதலை உறுதிப்படுத்தவும் வலுப்படுத்தவும் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என இலங்கை வர்த்தக சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அவசர நடைமுறை மூலம் கொள்வனவு செய்யப்படும் மருந்துகள் உட்பட மருந்துகளைக் கொள்வனவு செய்யும்போது உயர்தர மருந்துகள் கொள்வனவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை உறுதியான சுயாதீனமான பங்களிப்பை வழங்கவேண்டும் என இலங்கை வர்த்தக சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (05)

# கோட்டாவின் வழியில் ரணிலாலும் கிழக்கு முஸ்லிம்கள் புறக்கணிப்பு!

## இம்ரான் எம்.பி. குற்றச்சாட்டு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வழியில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் கிழக்கு மாகாண முஸ்லிம்களைப் புறக்கணித்து வருகின்றார். என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குகருத்துத்தெரிவித்த அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

இலங்கையில் கிழக்கு மகாணத்தில் தான் முஸ்லிம்கள் அதிகமாக வாழ்கின்றனர். இந்நிலையில் கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட ஆளுநர் இம்மாகாண முஸ்லிம்களை பல்வேறு வகையிலும் புறக்கணித்து வந்தார்.



கிழக்கு மாகாணத்தில் உள்ள அதிகாரசபைகள், ஆணைக்குழுக்கள் என்பவற்றுக்கான தவிசாளர் மற்றும் பொதுமுகாமையாளர்கள் நியமனத்தில் முஸ்லிம்கள் எவரையும் அவர் நியமிக்காமல் புறக்கணித்திருந்தார். அதேபோல அமைச்சுக்களின் செயலாளர்களிலும் முஸ்லிம்களை அவர் நியமிக்கவில்லை. இது குறித்து நான் நாடாளுமன்றத்திலும் பிரஸ்தாபித்திருந்தேன்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக்காலத்திலும் கிழக்கு மாகாணத்தில் அதே முஸ்லிம் புறக்கணிப்பு தொடர்ந்து வருகின்றது.

தற்போதும் கிழக்கு மாகாண அதிகாரசபைகள், ஆணைக்குழுக்கள் என்பவற்றுக்கான தவிசாளர் மற்றும் பொதுமுகாமையாளர்கள் நியமனத்தில் முஸ்லிம்கள் எவரும் உள்வாங்கப்படவில்லை. அமைச்சுக்களின் செயலாளர் நியமனத்தில் முஸ்லிம் உத்தியோகத்தர்களின் சிரேஸ்ட தரம் கருத்தில் கொள்ளப்படவில்லை.

எனவே, கோத்தாபாயவின் அதே வழியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சியிலும் அதே முஸ்லிம் விரோதப் போக்கு தொடர்ந்து வருகின்றது.

எனினும், முஸ்லிம் அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இது விடயத்தைக் கண்டு கொள்ளாமல் இருப்பது குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன்.

நிலைமை இப்படியே நீடிக்குமாக இருந்தால் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் எதிர்காலத்தில் இன்னும் பல வழிகளிலும் புறக்கணிக்கப்படுவார்கள் என்பது உறுதி. எனவே, சகல முஸ்லிம்களும் இது தொடர்பில் கவனத்தில் கொண்டு எல்லா வழிகளிலும் ஜனாதிபதிக்கு எமது அதிருப்தியை தெரிவிக்க முன்வரவேண்டும். (05)

# நஸீர் அஹமட்டின் தொடர் அழுத்தம் காரணமாகவே ஆளுநரை நாடினேன்

## கல்வி அமைச்சின் செயலாளர் திஸாநாயக்க தெரிவிப்பு

கல்வி அமைச்சின் சட்ட திட்டங்களுக்கு எதிராக அமைச்சர் நஸீர் அஹமட் முன்வைத்த கோரிக்கையை உடனடியாக அமுல்படுத்துமாறு அமைச்சர் நஸீர் அஹமட் தொடர் அழுத்தம் கொடுத்து வந்தார்.

இது தொடர்பாக ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு சென்றேன். கல்வி அமைச்சின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்தார். (05)

# காத்தான்குடி ஹலாவுதீன் விடயத்தில் சட்டத்தின் சரத்துகள் மீறப்பட்டுள்ளன

## கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சங்க செயலாளர் கூறுகிறார்

காத்தான்குடி கோட்ட கல்வி அதிகாரியாக இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர் இருக்க முடியாது எனில் கிழக்கில் இலங்கை அதிபர் சேவைச் சேர்ந்த எவரும் கோட்ட கல்வி அதிகாரியாக இருக்க முடியாது. கிழக்கு மாகாணத்தில் 15 இற்கும் மேற்பட்ட இலங்கை அதிபர் சேவையினர் கோட்டக் கல்வி அதிகாரிகளாக இருக்க முடியுமாயின் காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரியான இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த கே.எம். ஹலாவுதீனும் இருக்க முடியும் என கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சங்க செயலாளர் ஏ.எல்.எம். முக்தார் தெரிவித்துள்ளார்.



அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரியாக இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த ஹலாவுதீன் இருக்கமுடியாதெனின் கிழக்கு மாகாணத்தில் இலங்கை அதிபர் சேவையை சேர்ந்த எவரும் கோட்டக்கல்வி அதிகாரியாக இருக்க முடியாது. இலங்கை அரசமைப்பின் அடிப்படை உரிமை தொடர்பான 111 ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்ட சட்டத்தின் முன் அனைவரும் சமம், சம உரிமை என்ற சரத்து ஹலாவுதீன் விடயத்தில் கிழக்கு மாகாண கல்வியமைச்சு, மட்டக்களப்பு மத்திய வலயக் கல்விப் பணிப்பாளர், கிழக்கு மாகாண ஆளுனர் ஆகியோரால் அப்பட்டமாக மீறப்படுகிறது என்பது தெளிவாகிறது என்று குறிப்பிடப்பட்டுன்னது. (05)

# முன்னாள் எம்.பி. அலவியின் மறைவுக்கு ரிஷாத் அனுதாபம்!





குருநாகல் மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமூக சேவையாளருமான அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அலவியின் மறைவு தனக்கு மிகவும் வேதனை தருவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

குருநாகல் மாவட்டத்தின் முதலாவது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினராகி வரலாற்றில் தடம்பதித்த அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அலவி, முஸ்லிம்கள் மாத்திரமின்றி சிங்கள மக்களாலும் அதிகம் நேசிக்கப்பட்டார்.

பம்மண்ணவை பிறப்பிடமாகக் கொண்ட அவர், மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக பல்வேறு வழிகளில் பாடுபட்டவர். குருநாகல் மாவட்டத்தில் குறிப்பாக, முஸ்லிம் சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்குத் தேவையான பல நல்ல பணிகளை மேற்கொண்டார். அத்துடன் சிங்கள - முஸ்லிம் மக்கள் மத்தியில் நல்லுறவைப் பேணுவதற்கு ஒரு பாலமாகச் செயற்பட்டார்.

1990 ஆம் ஆண்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் குருநாகல் மாவட்டத்துக்கு வந்தபொழுது, அவர்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம், மின்சாரம் உள்ளிட்ட இன்னோரன்ன வசதிகளைச் செய்துகொடுத்து அம்மக்களுக்கு உதவியதுடன், இடம்பெயர்ந்த மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கான வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

சமூகப் பற்றும் சமூகத்தின் மீது அதிக அக்கறையும் கொண்டு செயற்பட்ட அன்னார், தனது பதவிக் காலத்தில் மக்களுக்கு முடிந்த வரை சேவையாற்றினார். மக்கள் பணியை விரும்பிச் செய்த அவர் எந்நேரமும் சுறுசுறுப்புடன் கடமையாற்றுவார். மனிதநேயம் கொண்ட அன்னார், குருநாகல் மாவட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசியல் முக்கியஸ்தர்களை அடிக்கடி தொடர்புகொண்டு அவற்றை நிவர்த்தி செய்தவர். மேலும், குருநாகல் மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியை வளர்த்தெடுப்பதில் ஆர்வங்காட்டியவர்.

நற்பண்பாளரான அல்ஹாஜ் அலவியின் இழப்பால் துயருறும் குடும்பத்தினர்கள், உறவினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களுக்கு இழப்பை தாங்கக்கூடிய மனதைரியத்தையும் பொறுமையையும் வழங்க இறைவனை பிரார்த்திக்கின்றேன். - என்றுள்ளது. (05)

# ஆதனப் பெயர் மாற்றம்

[illegible]

காலைக்கதிர் Kalaikkathir

# 28 லட்சம் ரூபா பண மோசடி: இரு போலி முகவர்கள் கைது!

மட்டக்களப்பில், கனடா மற்றும் ஓமான் நாடுகளுக்கு அனுப்பிவைப்பதாகக்கூறி 28 லட்சம் ரூபாவை இருவரிடம் மோசடி செய்த கொழும்பு மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த இரு போலி முகவர்களைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கனடாவிற்கு அனுப்புவதாகக் கொழும்பிலுள்ள போலி முகவர் ஒருவர் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவரிடம் 15 லட்சம் ரூபாவைப் பெற்றுக்கொண்டு அவரைக் கடந்த 6 மாதகாலமாக ஏமாற்றி மோசடி செய்து வந்த நிலையில் அந்த போலி முகவருக்கு எதிராக பாதிக்கப்பட்டவர் விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்ததையடுத்து போலி முகவரை கொழும்பில் வைத்து திங்கட்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர். அதேவேளை ஓமான் நாட்டுக்கு வேலை பெற்று தருவதாக ஒருவரிடம் சின்ன ஊறணியைச் சேர்ந்த போலி முகவர் ஒருவர் 13 லட்சம் ரூபாவை பெற்றுக் கொண்டு ஏமாற்றி வந்த நிலையில் பாதிக்கப்பட்டவர் கொடுத்த முறைப்பாட்டுக்கு அமைய போலி முகவரை கைது செய்தனர். இந்த இரு வெவ்வேறு சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நீதவான் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போது இருவரும் வாங்கிய பணத்தை திருப்பி கொடுப்பதாகத் தெரிவித்த நிலையில் அவர்களை தலா ஒருவருக்கு இரு ஆள் பிணையில் நிபந்தனையில், பிணையில் நீதிவான் விடுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



# யாழ். பல்கலை பட்டமளிப்பு இன்று முதல் 3 நாள்களுக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37ஆவது பொதுப்பட்டமளிப்புவிழாவின் முதலாவது பகுதி, இன்று தொடங்கி மூன்று நாள்கள் இடம்பெறுகின்றது.

பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் எட்டு அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்தப்பட்டமளிப்புவிழாவை யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வேந்தர், வாழ்நாள் பேராசிரியர்; சி.பத்மநாதன் தலைமைதாங்கி நடத்துவார். பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப் பதக்கங்களையும், புலமைப் பரிசில்களையும் வழங்கி வைப்பார்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம், சேர் பொன் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம், இந்துக் கற்கைள் பீடம், சித்த மருத்துவ அலகு மற்றும் வவுனியா வளாகத்தைச் (தற்போதைய வவுனியா பல்கலைக்கழகம்) சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில் நுட்பக் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 162 பட்டப்பின் தகைமைபெற்றவர்களுக்கும், 1885 உள்வாரி மாணவர்களுக்கும், 166 வெளிவாரி மாணவர்களுக்கும்பட்டங்கள் வழங்கப்பட இருப்பதுடன், 65 உயர் தகைமை மற்றும் தகைமைச்சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தைச்சேர்ந்த 162 மாணவர்கள் உயர்பட்டத்தகைமைகளைப் பெறவுள்ளனர். அவர்களில் கலாநிதிப் பட்டத்தை ஆறு பேரும்;, முது மெய்யியல்மாணி பட்டத்தை 04 பேரும்;, தூய சக்தி தொழில்நுட்பங்களில் முதுமாணிப் பட்டத்தை 2 பேரும், வியாபாரநிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தை 56 பேரும், கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை 86 பேரும், கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை (பகுதி நேரம்) 05 பேரும், முகாமைத்துவத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை 03 பேரும் பெறவிருக்கின்றனர்.

உள்வாரியாக, மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 113 பேர் மருத்துவமாணி மற்றும் சத்திர சிகிச்சைமாணிப் பட்டத்தையும், மருத்துவ விஞ்ஞானமாணிப் பட்டத்தை ஒருவரும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 92 பேர் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 28 பேர் பிரயோக விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 119 பேர் விஞ்ஞானமாணிப் (பொது) பட்டத்தையும், 27 பேர் கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 21 பேர் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும் பெறவுள்ளனர்.

இவர்களுடன் விவசாய பீடத்தைச் சேர்ந்த ஒருவர் விவசாயத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், பொறியியற் பீடத்தைச் சேர்ந்த 116 பேர் பொறியியல்; சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், தொழில்நுட்பப் பீடத்தைச் சேர்ந்த 96 பேர் உயிர்முறைமைகளில் சிறப்புத் தொழில்நுட்பமாணிப் பட்டத்தையும், 93 பேர் பொறியியலில் சிறப்புத் தொழில்நுட்பமாணிப் பட்டத்தையும், 25 பேர் சித்த வைத்திய சத்திர சிகிச்சைமாணிப் பட்டத்தையும் பெறவுள்ளனர்.

அத்துடன், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடத்திலிருந்து சிறப்பு வியாபார நிர்வாகமாணிப் பட்டத்தை 282 பேரும், வியாபார நிர்வாகமாணிப் (பொது) பட்டத்தை 16 பேரும், சிறப்பு வணிகமாணிப் பட்டத்தை 88 பேரும், வணிகமாணிப் (பொது) பட்டத்தை 03 பேரும் பெறவிருக்கின்றனர்.

இவர்களுடன் கலைப் பீடத்தில் இருந்து பொதுக் கலைமாணி பட்டத்தை 217 பேரும், சட்டமாணி சிறப்புப் பட்டத்தை 69 பேரும் பெறவிருக்கின்றனர். சேர் பொன் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடத்தில் இருந்து நுண்கலைமாணி (சங்கீதம்;, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்) சிறப்புப் பட்டத்தை 135 பேரும் பெறவிருக்கின்றனர்.

மேலும், இணைந்த சுகாதார விஞ்ஞானபீடத்திலிருந்து தாதியியலில்; சிறப்பு விஞ்ஞானமாணிப்பட்டத்தை 54 பேரும், மருந்தகவியல் சிறப்புமாணிப் பட்டத்தை 55 பேரும், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தை 58 பேரும் பெறவிருக்கின்றனர்.

வவுனியா பல்கலைக் கழகத்தின் (முன்னைய வவுனியாவளாகம்) பிரயோக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 03 பேர் தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 04 பேர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் இளமாணிப் பட்டத்தையும், 6 பேர் விஞ்ஞானமாணிப் (பிரயோக கணிதமும் கணிப்பிடலும்) பட்டத்தையும், 7 பேர் விஞ்ஞானமாணிப் (சூழல் விஞ்ஞானம்) பட்டத்தையும், 10 பேர் கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 10 பேர் சூழல் விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், மேலும், 10 பேர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் சிறப்பு இளமாணிப் பட்டத்தையும் பெறவிருக்கின்றனர். வியாபாரக்கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த 06 பேர் செயற்திட்டமுகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், ஒருவர் வியாபார முகாமைத்துவமாணிப் (பொது) பட்டத்தையும், 04 பேர் சந்தைப்படுத்தலில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 30 பேர் கணக்கியல் மற்றும் நிதியியலில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 18 பேர் மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 14 பேர் வியாபாரப் பொருளியலில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும் பெறவிருக்கின்றனர். மேலும், தொழில்நுட்பக் கற்கைகள் பீடத்தில் இருந்து முதன்முறையாக 52 பேர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் இளமாணி சிறப்புப் பட்டத்தையும் பெற இருக்கின்றனர்.

இவர்களுடன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்விநிலையத்தில் கல்விகற்று வெளியேறிய 56 பேர் சிறப்பு வணிகமாணிப் (வெளிவாரி) பட்டத்தையும், 26 பேர் வணிகமாணி (வெளிவாரி-3 வருடங்கள்) பட்டத்தையும், 84 பேர் வியாபார முகாமைத்துவமாணிப் (வெளிவாரி) பட்டத்தையும் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

மேலும், 33 பேர் தொழில்சார் ஆங்கிலத்தில் தகைமைச்சான்றிதழையும், 02 பேர் உடற்கல்வியில் தகைமைச்சான்றிதழையும், 05 பேர் விஞ்ஞானத்தில் உயர் தகைமைச்சான்றிதழையும், 20 பேர் நுண்நிதியியலில் தகைமைச் சான்றிதழ்களையும், ஒருவர் வியாபார முகாமைத்துவத்தில் உயர் தகைமைச் சான்றிதழையும், மூவர் வியாபார முகாமைத்துவத்தில் உயர் தகைமைச் சான்றிதழையும், ஒருவர் வியாபார முகாமைத்துவத்தில் தகைமைச் சான்றிதழும் பெறுவது உறுதிப்படுத்தப்படவுள்ளது.

மேலும், இப்பட்டமளிப்பு விழாவில் சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 32 தங்கப்பதக்கங்களும், 10 புலமைப்பரிசில்களும், 25 பரிசில்களும் வழங்கப்பட இருக்கின்றன. மேலும், ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மதிப்புமிக்க பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கத்தை பீடமட்டத்தில் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், கலைப்பீடம் மற்றும் மருத்துவபீடத்தைச் சேர்ந்த மூவரும், பல்கலைக்கழக மட்டத்தில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும் பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுகின்ற மாணவர்களும், அவர்கள் சார்பில் பட்டமளிப்புவிழாவில் கலந்து கொள்ள வருகின்ற விருந்தினர்களும், ஏனையவர்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றது. பட்டமளிப்பு நிகழ்வுகளை நேரலையாக பல்கலைக்கழகத்தின் யூரியூப் மற்றும் முகப்புத்தகப் பக்கங்களினூடாகவும், பல்கலைக் கழகத்தின் இணையத்தளம் வாயிலாகவும் கண்டுகளிக்க முடியும்.

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம் ஸ்தாபிக்கப்பட்டு 50ஆவது வருடத்தில் நடைபெறவுள்ள பொன்விழா நிகழ்வுகளின் ஆரம்ப நிகழ்வாக இப் பட்டமளிப்பு விழா இடம்பெறவிருக்கின்றது.

# பாணுக்குள் போதை மாத்திரை மருந்துக் கடை சுற்றிவளைப்பு

சகுவாரோ எனப்படும் உடல் எடையை குறைக்கும் போதைப்பொருள் அடங்கிய மாத்திரைகளை உணவுப் பொருள்களில் மறைத்து விற்பனை செய்யும் மருந்துக் கடையொன்று தொடர்பில் கிடைத்த தகவலையடுத்து, பதுளை விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகள் அதனைச் சுற்றிவளைத்து 1793 மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

பதுளை மஹியங்கனை வீதியில் இயங்கி வரும் மருந்துக் கடை ஒன்றில் பாணில் 88 மாத்திரைகளும் விற்பனைக்காக தனித்தனியாக 1705 மாத்திரைகளும் மறைத்துவைக்கப்பட்டிருந்தன எனக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த போதைப்பொருள் பதுளை பிராந்திய சுகாதார சேவை அலுவலக உணவு மற்றும் மருந்து பரிசோதகர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு எதி ராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# சிவசிதம்பரம் நூற்றாண்டு விழா

தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவரும் உடுப்பிட்டி, நல்லூர் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சிவசிதம்பரத்தின் பிறந்த நூற்றாண்டு நினைவு விழா நாளை மாலை 3 மணிக்கு வடமராட்சி கரவெட்டி சம்பந்தர் கடையடி மகேசன் விளையாட்டுமைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் கு. மிகுந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் வீ.ரி. தமிழ்மாறன், யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, தினக்குரல் முன்னாள் பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கம், சிவசிதம்பரத்தின் மகள் திருமதி நிராஞ்சலி தேவராஜ் ஆகியோர் உரையாற்றுவர். தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி விழாவில் கௌரவிக்கப்படுவார்.

அமரர் சிவசிதம்பரத்தின் அரசியல் வாழ்வு ஆவண நூலொன்றும் வெளியிடப்படும். கலைநிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

# குமுதினிக்கு சமநிலைப் பரிசோதனை











மறுசீரமைக்கப்பட்ட குமுதினி படகின் சமநிலை பரிசோதனை நேற்று வல்வெட்டித்துறை - ரேவடி கடற்கரையில் இடம்பெற்றுள்ளது.

நெடுந்தீவுக்குப்பயணிகளைஏற்றியிறக்கும் அரசபடகாக நீண்டகாலம் பணியில் இருக்கும் குமுதினி முழுமையான மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான குமுதினி படகு வல்வெட்டித்துறை - ரேவடி கடற்கரையில் வைத்து வல்வெட்டித்துறை - நெடியகாட்டை சேர்ந்த சரவணபவன் என்பவரால் மறுசீரமைக்கப்பட்டது. .

சீரமைப்புப் பணிகள் முடிந்து கடலில் இறக்கப்பட்ட குமுதினியில் பிற்பகல் 2 மணியளவில் சமநிலை பரிசோதனை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாண பணிப்பாளர் ஜொய்ஸ் குறூஸ் முன்னிலையில் இடம்பெற்றது.

கப்பல் கட்டடக்கலை ஆலோசகர் கலாநிதி விமல்ஸ்ரீயினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. குமுதினி படகில் சுமார் 4 ஆயிரம் கிலோ சுமை மற்றும் 85 பயணிகள் ஏற்றப்பட்டு சுமார் 2 மணிநேரம் பரிசோதனை இடம்பெற்றுள்ளது.

பரிசோதனை முடிவுகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் அடுத்துவரும் சில நாட்களில் குமுதினி படகு பயணிகள் சேவையில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பரிசோதனைக்கு வல்வெட்டித்துறை மக்கள் தமது முழு ஒத்துழைப்பை வழங்கினர்.

காலைக்கதிர் Kalaikkathir

# துருக்கியில் தடையான பயங்கரவாத அமைப்பு இலங்கையில் இருந்தும் அகற்றப்பட்டுள்ளதாம்

## துருக்கி தூதுவர் கூறுகின்றார்

துருக்கியில் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு இலங்கையிலிருந்து அகற்றப்பட்டுள்ளது என இலங்கைக்கான துருக்கி தூதுவர் டெமெட் செகெர்சியோ குளு தெரிவித்துள்ளார்.

2016 சதிப்புரட்சிக்கு காரணமான பெத்துல்லாஹிஸ்ட் என்ற அமைப்பே இலங்கையிலிருந்து அகற்றப்பட்டுள்ளது என துருக்கி தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையும் துருக்கியும் இணைந்து முன்னெடுத்த பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை மூலம் தனது நாட்டில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பை இலங்கையிலிருந்து அகற்ற முடிந்துள்ளதாக துருக்கி தூதுவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான வலுவான விழிப்புணர்வையும் பதில்நடவடிக்கையையும் கட்டியெழுப்புவதற்காக இலங்கையுடன் துருக்கி புலனாய்வுத்தகவல்களை பரிமாறிவருகின்றது எனவும் தூதுவர் தெரிவித்துள்ளார். (05)



# இலங்கையில் 5,000 தகவல் தொழில்நுட்ப வேலை வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பம்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலின் கீழ், இலங்கை அரசாங்கம் பல்வேறு துறைகளில் அதிக வேலைவாய்ப்புகளை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கண்டுள்ளது.

இலங்கையில் தகவல் தொழில்நுட்பத் துறையை மேம்படுத்துவதற்காக ரணில் விக்கிரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வையின்கீழ்அண்மையில்இந்தியாவிற்கு விஜயம் செய்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இந்தியதகவல்தொழில்நுட்ப நிறுவனமான எச்.சி.எல். லிமிடெட் உடன் தொழிற்நுட்பதுறையை விரிவாக்குவதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராயும்வகையில் கலந்துரையாடல் மேற்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, புதுடெல்லியில் எச்.சி.எல். லிமிடெட் நிறுவனத்தின்மூத்தநிர்வாகிகளை சந்தித்த ஆளுநர் செந்தில் தொண்டமான், இலங்கையின் 5,000 தகவல்தொழில்நுட்பதுறை திறமையாளர்களுக்கு வேலைவாய்ப்புவசதிகளை வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்தியதுடன், ஆளுநரின் முன்மொழிவானது எச்.சி.எல். லிமிடெட் நிறுவனம் மத்தியில் பெரும் வரவேற்பினையும் பெற்றுள்ளது. மேலும், எச்.சி.எல். லிமிடெட் நிறுவனம் இலங்கையில் அவர்களின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கான உறுதிப்பாட்டையும் வழங்கியுள்ளது. உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற தகவல் தொழில்நுட்ப சேவை வழங்குநரான எச்.சி.எல். லிமிடெட், இலங்கையில் தமது நிறுவனத்தை விரிவாக்கம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது.

ஆளுநர்செந்தில்தொண்டமானின் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களின் விளைவாக, எச்.சி.எல். லிமிடெட், முதலீட்டுச்சபையுடன் உடன்படிக்கையில் கையெழுத்திடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உடன்படிக்கையைமேற்கொள்ள இலங்கையில் உறுதுணையாகப் பங்காற்றியிருக்கும்தலைவர் தினேஷ் வீரக்கொடியின் ஆலோசனையின் பேரில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆளுநர் செந்தில் தொண்டமானினால் முன்னெடுக்கப்பட்ட இந்த முக்கிய முயற்சி இலங்கை முழுவதும் 5,000 தகவல் தொழிநுட்பப் பொறியியலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதுடன், இது இலங்கைநாட்டின் வரலாற்றில் தகவல் தொழிநுட்பத் துறையில் மிகப்பெரிய முதலீடாகவும்அமைந்துள்ளதுடன், அந்நிய செலாவணியை அதிகரிப்பதில் முக்கிய பங்களிக்கிறது. (05)

# அஸ்வெசும நலன் உதவி திட்டத்துடன் இணைந்த வகையில் சமுர்த்தி திட்டத்தை நடைமுறைப்படுத்தல் குறித்துப் பயிற்சி





'அஸ்வெசும' நலன் உதவி திட்டத்துடன் இணைந்த வகையில் சமுர்த்தி திட்டத்தை நடைமுறைப்படுத்தல், தொடர்பான பயிற்சி நெறி அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச செயலகங்களில் தமிழ் மொழியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு திங்கட்கிழமை அக்கரைப்பற்று செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இப்பயிற்சி நெறியின் பிரதான வளவாளராக மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம் சப்றாஸ் கலந்து கொண்டு நடத்தினார்.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரி.எம்.எம்.அன்சார், உதவிப் பிரதேச செயலாளர் வை.றாசித் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர். இதில் தலைமைபீட முகாமையாளர்கள், வங்கி சங்க முகாமையாளர்கள், வங்கி முகாமையாளர்கள், கருத்திட்ட முகாமையாளர்கள், வலய உதவியாளர்கள், மகாசங்க நிறைவேற்றுக்குழு தலைவர்கள் மற்றும் வங்கி கட்டுப்பாட்டுச் சபை தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)


# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -15, கோவில் வீதி, 393/41 என்ற ஆதன இலக்கத்தை கொண்ட ஆதனம் பாலசிங்கம் பெண் சத்தியயாலதேவி என்ற பெயரில் யாழ் மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுகின்ற ஆதனத்தின் சொரியலான அரைவாசியினை சுப்பிரமணியம் அருணகிரிநாதனும் பெண் விமலா அருணகிரிநாதனும் பிரசித்த நொத்தாரிசு டே.இராஜதுரை முகதாவில் 01.09.1985 ம் திகதியன்று 5466 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் பாலசிங்கம் பெண் சத்தியபாலதேவி என்பவருக்கு அறுதி விற்றிருந்தார் .

மிகுதி சொரியலான அரைவாசி உள்ளிட்ட முழு ஆதனத்தின் மீதான உரித்து சாதனத்தினை தற்போது NO 120, TOWN HAVEN PLACE508, SCARBOROUGH, ONTARRIO, MIK 5H6, CANADA வில் வசிக்கும் நாகரட்ணம் பாலசிங்கம் மற்றும் பெண் சத்தியபாலதேவி ஆகியோர் தமது அற்றோனித்தத்துவக்காரரான நாகரட்ணம் கமலாதேவி ஊடாக தோன்றி பிரசித்த நொத்தாரிசு தி.கணதீபன் முகதாவில் 01.11.2019 ம் திககியன்று 1665 ம் இலக்கத்தில் நிறைவேறிய உரித்துப்பிரகடனமும் ஆட்சிப்பிரகடனமும் என்ற உறுதியில் இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுகின்ற முழுமையான ஆதனத்திற்கும் தாமே சொந்தக்காரர்கள் என வெளிப்படுத்தியுள்ளார்கள்.

பின்னர் இவ் ஆதனத்தை NO 120, TOWN HAVEN PLACE508, SCARBOROUGH, ONTARRIO, MIK 5H6, CANADA வில் வசிக்கும் நாகரட்ணம் பாலசிங்கம் மற்றும் பெண் சத்தியபாலதேவி ஆகியோர் தமது அற்றோனித்தத்துவக்காரான நாகரட்ணம் கமலாதேவி ஊடாக தோன்றி 29.12.2019ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தி.கணதீபன் முகதாவில் 1687 ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி மூலம் பாலசிங்கம் சிவபாலன் என்பவருக்கு அறுதி விற்றிருந்தார் .

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை மூலிச்சந்தன் வெளி நிலப்பரப்பு இரண்டு குளிகள் பதினேழுடன் மூன்றின் கீழ் எட்டு (நில 2 குளிகள் 17 3/8).

இதன் எல்லைகள் .

கிழக்கு : வீதி

வடக்கு :- ஆறுமுகம் மாணிக்கத்திற்கு சொந்தமான ஆதனம் .

மேற்கு :- முத்துக்குமாரு தியாகேசம்பிள்ளை பெண் இராதாவின் ஆதனம்

தெற்கு :- ஒழுங்கை

இதிலுள்ள கல்வீடும் கிணறும் மலசலகூடமும் வான் பயிர் செய் பயிர்கள் உள்ளடங்கலாக இதடங்கலனைத்தும்

தற்போது பாலசிங்கம் சிவபாலன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார் . எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/முழுமையாகவோ உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பாலசிங்கம் சிவபாலன் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை என்தனைத் தெரிவித்துக்கொள்கிறேன் .

ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்



# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 14 [illegible] வீதி ஆதன இலக்கம் 458 எனும் ஆதனம் [illegible] பெண் பார்வதிஆச்சி என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை 1972 ஆம் ஆண்டு [illegible] 1994 ஆம் ஆண்டு [illegible]

குறித்த ஆதனத்தை [illegible] 21.07.2022 ம் திகதியிட்டு [illegible] 2314ம் இலக்க [illegible] 01 குளி 9.41 [illegible]

பின்னர் குறித்த ஆதனத்தை [illegible] 19.09.2022 ஆம் திகதியிட்டு [illegible] 2323ம் இலக்கத்தில் [illegible] P.புஸ்பராஜா [illegible] 19.09.2022 ஆம் திகதியிட்டு வரைந்த 8462I [illegible] 01 [illegible] 01 குளி 9.41

இதில் 2939 ம் இலக்க [illegible] (00) [illegible] (15) [illegible] 01 குளி D.26. [illegible] P.புஸ்பராஜா [illegible] 2022.09.19 ந் திகதி [illegible] 8877 ம் இலக்க [illegible] 1,2 [illegible] 1 [illegible]

**ஆதன அட்டவணை**

[illegible] I/80 [illegible] 458 ம் [illegible] 22 ம் [illegible] (01) [illegible] (9.40) [illegible] 2022.07.16 ந் திகதி [illegible] 8462 P ம் இலக்க [illegible] 1 [illegible] 1 குளி D.26 [illegible]

[illegible]

ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.07.2023இல் வெளியிடப்பெற்றது.